Registered as a Newspaper

குறுகிய காலத்தில்
மக்களின்
நன்மதிப்பையும்
ஆதரவையும் பெற்ற
ஒரே ஜவுளி நிறுவனம்
இளவரசி
S12, நவீன சந்தை,
சுன்னுகம்.

# சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

பெண்மணிகளுக்கும்
சிறுவர் சிறுமியருக்கும்
ஏற்ற
இறக்குமதி செய்யப்பட்ட
நவீன
புடவை தினுசுகளுக்கும்
றெடிமேட்
ஆடைகளுக்கும்
புகழ் பெற்றவர்கள்
இளவரசி
S12, நவீன சந்தை,
சுன்னுகம்.

மலர்:- 2 யாழ்ப்பாணம் பிரபவ ஞு ஆடி மீ 2 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 21 (18-07 1987) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:-25

# தமிழர்கள் ஏற்கக் கூடியதான தீர்வுக்கு மீண்டும் வலியுறுத்து

## 3 நாட்களில் 2 தடவைகள்

### ஜே. ஆர் -- டிக்ஸிற் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

**தமிழர்கள் ஏற்கக்கூடிய ஒரு தீர்வை ஸ்ரீ லங்கா அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என்றே இந்தியா எதிர்பார்க்கிறது என மீண்டும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது**

**மூன்று நாட்களில் இரண்டாவது தடவையாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்றும் கடந்த வியாழக்கிழமை இரவு சந்தித்த போது இந்தியத் தரப்பில் முன்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது.**

**தமிழ்ப் போராளிகளின் நிலைப்பாடு குறித்தும் தாம் ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்குத் தெளிவாக எடுத்துக் கூறியதாகவும் திரு. டிக்ஸிற் சொன்னார் என்று புதுடில்லித் தகவல்கள் தெரிவித்தன.**

திரு.ஜெயவர்த்தனவும், திரு. டிக்ஸிற்றும் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசியது தெரிந்ததே.

அப்போது வடக்கு - கிழக்கு இணைந்த சுயாட்சி அமைப்புக் குறித்து திரு. டிக்ஸிற் வலியுறுத்தி இருந்தது தெரிந்ததே.

வியாழக்கிழமை இரவு திரு. ஜெயவர்த்தன, திரு. டிக்ஸிற்றை அழைத்துப் பேசினர்.

இப் பேச்சுக்களின் போது ஜனாதிபதியுடன் பத்து சிரேஷ்ட அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

சந்திப்பின் பின்னர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆர். வீக்கு ஜே. ஆர். வாழ்த்து

கொழும்பு, ஜூலை 18

ஜனாதிபதி ஜெயவர்த்தன நேற்று புதிய இந்திய ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமனுக்கு வாழ்த்துச்செய்தியொன்றை அனுப்பி வைத்தார்.

பாரம்பரிய உறவுகளின் அடிப்படையில் இரு நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பு, நல்லெண்

(8ஆம் பக்கம் பார்க்க)

## கருத்துக் கலசம் — மயூரா

### கடமையும் சேவையும்

கடமை வேறு. சேவை வேறு. கடமை கட்டாயம் செய்யப்பட வேண்டியது. சேவை ஒருவரின் விருப்பத்தின் பேரில் செய்யப்படுவது.

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் பல கடமைகள் உள்ளன. தொழிற் கடமை, குடும்பக் கடமை, சமூகக் கடமை, நாட்டுக் கடமை என்று கடமைகள் பல வகைப்படும்.

ஆனல் மனிதர்கள் தங்களைச் சார்ந்துள்ள பல கடமைகளில் ஒன்றைத் தானும் கண்ணியத்துடன் செய்வதில்லை. சிலர் தாங்கள் தொழில் புரியும் ஸ்தாபனங்களுக்கு விசுவாசமாகக் கடமை செய்வதில்லை. வேறு சிலர் குடும்பத்திற்குத் தாம் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதில்லை. இன்னும் சிலர் சமூகத்துக்கும், நாட்டுக்கும் தாம் செய்ய வேண்டிய பல கடமைகள் இருப்பதாகக்கூட நினைப்பது இல்லை.

சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணப்பாடு ஒருவரின் மனதில் குடிகொண்டுவிட்டால் அவர் சேவையைத் தனது கடமை ஆக்கிக் கொள்வார். அவ்வாறனவர்களே உண்மையான சமூகத் தொண்டர்கள்.

சமூகத் தொண்டர்களாயினும் சரி. சமயத் தொண்டர்களாயினும் சரி முழு நேரத் தொண்டர்களாக இருப்பவர்கள் இப்போது மிகக்குறைவு.

சமூகத் தொண்டு புரியும் பலர் தங்கள் பணியை அல்லது கடமையை பொழுதுபோக்குப் பணியாக அல்லது பகுதி நேரப் பணியாகவே செய்கிறார்கள்.

இவர்களில் சிலர் தமது சொந்த அலுவல்களை ஒதுக்கிவிட்டு சமூகப் பணிக்கு முதலிடம் கொடுப்பதும் உண்டு. மற்றும் சிலர் சமூகப் பணியைத் தமது சொந்த நலனுக்காகச் செய்வதும் உண்டு.

கடமையை கண்ணியத்துடனும் விசுவாசத்துடனும் செய்பவர்களே நாட்டு வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் உதவும் நற்பிரசைகள் வரிசையில் சேர்க்கப்படுவர்.

சமூக சேவையை, நாட்டுச் சேவையை தம் சொந்தக் கடமையாகக் கருதிச் செய்யவல்ல முழு நேரத் தொண்டர்களே நாட்டு முன்னேற்றத்துக்கும், மனிதஅவலங்களைப் போக்கவும் உதவ முடியும்.

சமூக, தேச, சமயத் தொண்டர்கள் எப்போதும் மனித நேயத்தைத் தமது இலட்சியமாகக் கொள்ள வேண்டும். தமக்குக் கஷ்டம் வரினும் மற்றவனது துன்பத்தைப் போக்குவதற்கு உழைக்கும் மனபக்குவமும் தொண்டனுக்கு அத்தியாவசியம்.

## இந்தியக் கப்பலில்வந்த உணவுப் பொருள்கள் "மெற்றல் டிடக்டர்" கருவி மூலம் கடும் சோதனை

ஐந்தாவது இந்தியக் கப்பலான எம். பி. நிக்கோரேட்டில் இருந்து இறக்கப்படும் உணவுப் பொருள்களை இராணுவத்தினர் உலோகங்களைக் கண்டு பிடிக்கும் "மெற்றல் டிடக்டர்" கருவி மூலம் சோதனையிடுகின்றனர்.

இதுவரை வந்த கப்பல்களை விட "நிக்கோரேட்" மிகப் பெரிய கப்பல் என தெரிவிக்கப்படுகிறது.

நேற்று துறைமுகத்துக்குள் கொண்டு வரப்பட்ட கப்பலில் இருந்து உணவுப் பொருள்கள் இறக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உணவுப் பொருள்களை இறக்கி முடிவதற்கு ஆகக் குறைந்தது மூன்று நாட்களாவது எடுக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-10)

## ஈழத்தமிழரைக் காக்க நடவடிக்கை எடுங்கள்

### ராஜீவிற்கு எம். ஜி. ஆர் கடிதம்

சென்னை, ஜூலை 18

இலங்கைத் தமிழர் மீது மீண்டும் நடத்தப்படும் இராணுவத் தாக்குதல்கள் குறித்து தமிழ் நாடு முதலமைச்சர் எம். ஜி இராமச்சந்திரன், பிரதமர் ராஜீவ் காந்திக்கு கடிதம் அனுப்பி வைத்திருக்கின்றார்.

தமிழரைக் காப்பாற்ற உறுதியான நடவடிக்கைகள் எடுக்கும் படி அக் கடிதத்தில் பிரதமரை திரு. இராமச்சந்திரன் கேட்டிருக்கின்றார்.

இத்தகவலை கூட்டம் ஒன்றில் பேசுகையில் தமிழ்நாடு உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் வெளியிட்டார்.

(உ-எ)

## வவுனியா பிக்குவை அரசியல் தூதராக அங்கீகரிக்க முடியாது

### லக்ஷ்மி பூரி கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 18

வவுனியா விகாராதிபதி வண. சியம்பலகஸ்வெவ விமலசாரதேரரின் தமிழக விஜயத்தை அரசியல் தூதாக அங்கீகரிக்க முடியாது என்று இந்திய தூதரக செயலாளர் திருமதி லக்ஷ்மி பூரி தெரிவித்துள்ளார்.

அவர் ஏற்கனவே தமிழகத்தில் சென்னையில் இருக்கின்றார் என்று இந்து பத்திரிகையில் வெளிவந்ததகவல் பிழையானது என்றும் திருமதி பூரி சுட்டிக்காட்டியுள்ளார்.

வவுனியா தேரரை ஒரு மதவாதியாகவே நாம் கருதுகிறோம்; அரசியல் வாதியாக அல்ல. எனவே அவரது தமிழக

(8ஆம் பக்கம் பார்க்க)

## நெல்லியடியில் வீடுகள் தகர்ப்பு

வடமராட்சி, ஜூலை 18

நெல்லியடியிலுள்ள வீடுகள் பல இராணுவத்தினரால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டு வருகின்றன.

அனேகமாக நெல்லியடி இராணுவ முகாமிற்கு அண்மையில் உள்ள வீடுகளே இராணுவத்தினரால் தகர்க்கப்படுகின்றன.

நேற்றுக் காலை முதல் மாலை வரை நெல்லியடியைச் சூழவுள்ள பகுதிகளில் அடுத்தடுத்து குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டதுடன், ஆங்காங்கே புகை மண்டலமும் கிளம்பியது.

(உ-160)

### சுபநேரம்

18-07-1987
சனிக்கிழமை
சுபநேரம்:-
3 00 முதல் 4.30 வரை
ராகுகாலம்:-
9.00 முதல் 10.30வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
அட்டமி முன்னிரவு 7.23 வரை

## தமிழ்த் தாய்மாருக்கு சுமித்திரையின்தியாகம் ஒரு வழிகாட்டல்

### கம்பன் விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 18

'எனதுதாலிக்கொடியை விற்று காசு தருகிறேன் கள்ளத்தோணியிலாவது வெளிநாட்டுக்குப் போய் தப்பிக்கொள்ளடா மகனே' என்று தமது பிள்ளைகளை வெளி நாட்டுக்கு அனுப்பிவைக்கும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஹென்றிபெரேராவுக்கு 10ஆண்டுச்சிறை

கொழும்பு, ஜூலை 18

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் குற்றஞ் சாட்டப்பட்ட ஹென்றி பெரேராவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் கடந்த வியாழன் 10 ஆண்டுகால கடூழியச் சிறைத்தண்டனை விதித்தது.

பயங்கர ஆயுதங்கள், கைக்குண்டுகள் வைத்திருந்ததாக இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

புளொட் இயக்க உறுப்பினரான ஹென்றி பெரேரா இரண்டு குற்றச்சாட்டுகளில் குற்றவாளியாகக் காணப்பட்டார்

(உ-எ)

### இன்றைய சஞ்சீவியில்- -

- ★ அருண்நேரு வெளியேற்றமும் இந்திய உள்நாட்டு அரசியலும்
- ★ சதாசிவம் கொலை வழக்கில் மருத்துவ நிபுணரின் சாட்சியம்
- ★ புதிய பந்தயமும் பழைய பந்தயமும் (உள்ளும் புறமும்)
- ★ மறுமலர்ச்சிக் காலக் கடிதங்கள்
- ★ ஆடிப்பிறப்பும் ஆடிக்கூழும்
- ★ சிறுகதை ★ சாயிபாபா
- ★ குத்துச்சண்டை வீரர் முகமட் அலி
- ★ காவலூர்க் கவிஞர் செல்வராசாவின் பணி

## புலிகளின் காவலில் உள்ள 12சிப்பாய்கள் உண்ணவிரதம்

### அரசின் அசிரத்தையைஆட்சேபித்து

யாழ்ப்பாணம், ஜூலை18

தமிழீழ விடுதலைப் புலிகளினல் சிறை பிடிக்கப்பட்டு நான்கு மாதங்களாக காவலில் வைக்கப்பட்டுள்ள பன்னிரண்டு சிப்பாய்கள் நேற்றுவெள்ளிக்கிழமை ஒரு நாள் அடையாள உண்ணவிரதம் ஒன்றை மேற்கொண்டனர்.

அதிகாலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை சிப்பாய்கள் உண்ணவிரதமிருந்தனர்.

பத்திரிகையாளர்கள் முன்னிலையில் சிப்பாய்கள் உண்ணவிரதத்தை முடித்துக் கொண்டனர்.

பின்னர் சிப்பாய்கள் தாங்கள் அடையாள உண்ணவிரதம் மேற்கொண்டதன் நோக்கத்தை பத்திரிகையாளர்களுக்கு விவரித்தனர்.

லண்டன் ஒப்சேர்வர் பத்திரிகையாளரான டிரேன் பகத் என்பவரும் இச் சந்திப்பில் கலந்து கொண்டார்.

பத்திரிகையாளரிடம் சிப்பாய்கள் தெரிவித்ததாவது;

முன்னர் புலிகளினல் சிறைப்பிடிக்கப்பட்ட 2 சிப்பாய்கள் விஷயத்தில் அரசு யுத்தகால முறையைக் கடைப்பிடித்தது.

இரு நாடுகளுக்கும் இடையில் நடைபெறுவது போன்று சிப்பாய்கள் பரிமாற்றம் செய்

(8 ஆம் பக்கம் பார்க்க)




## தீவிரவாதிகள்மிரட்டலினலேயே இடைத்தேர்தல் ஒத்திவைப்பு

### ஐ. தே. க. பொதுச் செயலாளர் அறிக்கை

— சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, ஜூலை 18

தீவிரவாதிகளின் மிரட்டல்கள் காரணமாகவே வடக்கு,கிழக்கு மாகாண இடைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

- இவ்வாறு ஐ. தே. கட்சியின் பொதுச் செயலாளர் திரு. நந்தலால் பெர்னுண்டோ தெரிவித்துள்ளார்;

இடைத் தேர்தல்கள் ஒத்திவைப்புத் தொடர்பாக பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் வெற்றிடமாக உள்ள 14 தொகுதிகளின் வேட்பு மனு தாக்கல் செய்ய விரும்பும் தமது கட்சி உறுப்பினர்களிடமிருந்து ஐ.தே. க. விண்ணப்பம் கோரியிருந்தது.

வன்னி மாவட்டத்தில் வெற்றிடமாக உள்ள தொகுதிகளுக்காக வேட்பு மனு விண்ணப்பங்கள் கட்சிக்குக் கிடைத்தன. இங்கு விண்ணப்பதாரிகள் தீவிரவாதிகளால் மிரட்டப்பட்டுள்ளனர். மன்னரில் ஒரு விண்ணப்பதாரர் கடத்தப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் வேட்புமனு விண்ணப்பம் செய்த சிங்கள, தமிழ், முஸ்லிம் விண்ணப்பதாரர்களும் மிரட்டப்பட்டிருக்கின்றனர்.

இந்த நிலைமையிலேயே இடைத்தேர்தல்களுக்கான விண்ணப்பங்கள் தாக்கல் செய்வது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (உ-161)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

**சின்னஞ் சிறு விளம்பரம்**

**சேவை**

முதலாம் குறுக்குத் தெருவில் இயங்கி வந்த யாழ் சைனீஸ் றெஸ்ரோறன்ற் தற்போது 168 கோவில் வீதியில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இது கைலாயபிள்ளையார் கோயில் சந்தியிலிருந்து கோவில் வீதி தெற்குப் பக்கமாக நூறு யார் தொலைவில் உள்ளது. (1286)

**வாடகைக்கு**

காங்கேசன்துறை வீதி கொக்குவில் சந்தியில் உள்ள கிராமிய வங்கிக்கு மேலே உள்ள வீடு சகல வசதிகளுடனும் கூடியது. தொழில் நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் நடத்துவதற்கு உகந்த இடம் வாடகைக்கு உண்டு. தொடர்பு அ. மாணிக்கவாசகம், கே.கே.எஸ். ரோட், கொக்குவில் மேற்கு, கொக்குவில். (1285)

**புத்தகம்**

காத்திருந்தது போதும் வெளி வந்துவிட்டது. ''வாழ்க்கைக்கு நலம் தரும் நியூமராலஜி'' தனிப்பிரதி 6/50, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். தபாலில் பெறுவதாயின் ஒன்பது ரூபா முத்திரைகள் அனுப்பவும். டேவிட் விகோரி, 38, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (1280)


**சிரிக்க---**

மகள்: அப்பா அண்ணன் பணம் வேணுமென்று கடிதம் எழுதி இருக்கிறார்.

தந்தை: ''நீ பணம் வேணும் என்று எழுதிய கடிதம் கிடைக்கவில்லை'' என்று பதில் எழுதிவிடம்மா.

—வயவையூர் வதனராணி

# மருத்துவ நிபுணத்துவ சாட்சியம் விசாரணையில் ஏற்படுத்திய பரபரப்பு

சதாசிவத்திற்கு எதிரான குற்றச்சாட்டு முற்றும் முழுதாக வேலைக்காரன் வில்லியத்தின் சாட்சியத்தில்தான் தங்கியிருந்தது.

அதனால் வில்லியம் அளித்த சாட்சியத்தின் நம்பகத்தன்மை எத்தகையது என்பதை முடிவு செய்வதில் நீதிமன்றம் அதிக சிரத்தை எடுக்க வேண்டியதாயிற்று.

கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் இடம், நேரம் ஆகியவை தொடர்பாக வில்லியம் அளித்த சாட்சியங்கள் பொய்யாக அல்லது தவறுள்ளவையாக இருந்தால் அதனடிப்படையில் வழக்கு தள்ளுபடியாகிவிடும் என்ற நிலையில்தான். சேர் சிட்னி ஸ்மித் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டார்.

சட்டவைத்திய அதிகாரி டி சேரம் சமர்ப்பித்தபிரேத பரிசோதனை அறிக்கையில் கொலை செய்யப்பட்ட நேரம் தொடர்பாக தெரிவித்த கருத்துக்கும்—

வில்லியத்தின் சாட்சியத்திற்கும் இடையில் பெரிய வேறுபாடு நிலவியது.

இந்த நிலையில்தான் — மிகுந்த பரபரப்புக்கு மத்தியில் சேர் சிட்னி ஸ்மித் சாட்சியமளித்தார்.

### கொலை நிகழ்ந்த நேரத்தை எப்படி நிர்ணயிப்பது?

மருத்துவவியல் அறிவின் அடிப்படையில் அவர் அளித்த சாட்சியத்தை இனிப் பார்ப்போம்.

பிரேத பரிசோதனையின் போது மூன்று விடயங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டே உயிர் பிரிந்த நேரத்தை நிர்ணயிக்கமுடியும்.

முதலாவது சடலத்தின் வெப்ப நிலை—

இரண்டாவது சடலத்தின் தசைகள் விறைத்திருக்கும் நிலைமை—

மூன்ருவது இரைப்பையிலும் குடலிலும் உள்ள ஆகாரத்தின் சமிபாடடைந்த நிலை—

இந்த மூன்றுமே முக்கியமானவை.

இந்த வழக்கில் கொல்லப்பட்ட திருமதி சதாசிவத்தின் இரைப்பை மற்றும் சிறுகுடலினுள் அரைவாசி சமிபாடடைந்த நிலையில் இடியப்பம் மற்றும் தேங்காய்ப்பால் மிகுதி ஆகியன காணப்பட்டன.

இதனை ஆராய்ந்த சட்டவைத்திய அதிகாரி டி சேரம் திருமதி சதாசிவம் கொல்லப்படுவதற்கு ஆகக் குறைந்தது மூன்று மணித்தியாலத்துக்கு முன்னர் காலை உணவை உட்கொண்டிருக்கிறார் என்ற முடிவுக்கு வந்துள்ளார்.

ஆனால் சாட்சியங்களின்படி காலையில் 8-15 ...றது.

மாலை 6 மணியளவில் டாக்டர் டி.சேரம் பிரேத பரிசோதனை மேற்கொண்டபோது சடலத்தின் கை, கால், விரல்களைத் தவிர ஏனைய உடற்பாகங்கள் யாவும் விறைத்துப் போயிருந்தன.

உடல் கிடந்த நிலையை மருத்துவரீதியில் நோக்கும் போது இத்தகைய விறைப்பு ஏற்பட ஆறு தொடக்கம் எட்டுமணித்தியாலங்கள் தேவைப்பட்டிருக்கும்.

ஆகவே இந்தக் கணக்...

பது சாத்தியமற்றது — இப்படி சேர் சிட்னி சிமித் அடித்துக்கூறினர்.

அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் கொலை செய்யப்பட்ட மூவரின் சடலங்களை கொழும்பில் அதே சுவாத்திய நிலையில் வைத்து அந்த சடலங்களில் நிகழும் வெப்ப...

மணியளவில்தான் இந்தக் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதை மருத்துவ அடிப்படையில் நிரூபித்தார்.

ஆகவே கொலை நடந்த நேரம் தொடர்பாக வில்லியம் அளித்த சாட்சியம் மருத்துவ சான்று...

...பிரமிக்க வைப்பதாக இருந்தது.

### கொலை நடந்த நிலை, இடம்

தனது எஜமான் திருமதி. சதாசிவத்தை நிலத்தில் வீழ்த்தி கழுத்தை நெரித்து கொன்றதாகக் கூறுகிறான்.

ஆனால் சிட்னி ஸ்மித்தின் கருத்தே வேறுவிதமாக அமைந்தது.

டாக்டர் டி சேரத்தின் பிரேத பரிசோதனை அறிக்கைப்படி திருமதி. சதாசிவம் கழுத்துநெரித்...

காயங்களின் அடிப்படையில் சேர் சிட்னி ஸ்மித் உறுதிப்படுத்தினார்.



சிட்னி ஸ்மித்

அந்தக் காயங்களைப் பற்றியும்—

## சதாசிவம் கொலை வழக்கு

மணியளவில் ஆயாவும் சதாசிவத்தின் இரு குழந்தைகளும் பாடசாலைக்குப் புறப்பட்டபோது திருமதி சதாசிவம் தமது காலை ஆகாரத்தை உட்கொள்ளவில்லை என்பது தெரிகிறது.

அதற்குப் பின்னர்தான் அவர் காலை உணவை அருந்தியிருக்க வேண்டும்.

குழந்தைகள் பாடசாலைக்குப் புறப்பட்டகையோடு அவர் உணவை உட்கொண்டார் என்று கொண்டால்— அது முடிவடைந்து மூன்று மணித்தியாலங்களின் பின்னர்தான் அவர் கொலையுண்டிருக்க வேண்டும்.

அதாவது கொலை ஆகமுந்தியது நண்பகல் 11 மணிக்குப் பின்னரே நடந்திருக்க முடியும். வில்லியம் கூறுவதுபோல காலை 9 மணிக்கு அல்ல என்பது தெளிவாகின்...

...கின்படி பார்க்கும்போது உயிரிழப்பு காலை 10 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையில் நிகழ்ந்திருக்க வேண்டும். பெரும்பாலும் 12 மணியாகவே இது இருக்க முடியும் என்ருர் சேர் ஸ்மித்.

சடலத்தின் வெப்பநிலை வீழ்ச்சியை பொறுத்தவரை மாலை 6 மணிக்கு டாக்டர் டி.சேரம் அதனை அளவீடு செய்தபோது அது 93.2 பாகை பரனைட்டாக இருந்தது. அதாவது சாதாரண உடல் வெப்பநிலையில் 5.2 பாகை பரனைட்டை சடலம் இழந்துவிட்டிருந்தது.

### பிரேத பரிசோதனையில் கொலை நிகழ்ந்த நேரத்தை நிர்ணயிக்கும் அடிப்படைகள்

சிமெந்து நிலத்தில், மெல்லிய சீலையால் சுற்றப்பட்டிருந்த இத்தகைய ஒல்லியான சடலம் 5.2 பாகை பரனைட் வெப்பநிலையை இழப்பதற்கு பத்து மணித்தியாலம் எடுக்கும் என்...



லண்டன் மாநகரில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் திரு. சதாசிவமும், அவரது மனைவியான திருமதி சதாசிவமும் காணப்படுகிறார்கள்.

இவ்வழக்கு விசாரணைத் தொடரைத் தவருமல் படிக்கும் வாசகர் ஒருவர் அஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வைத்த படம் இது.

நிலை வீழ்ச்சியை அரை மணிக்கு ஒரு தடவை டி. சேரம் குறித்துக் கொண்டார்.

ஏறத்தாழ திருமதி சதாசிவத்தின் சடலம் கிடந்த நிலையில் வைக்கப்பட்ட இந்த மூன்று சடலங்களிலும் 5.2 பாகை வெப்பநிலை வீழ்ச்சி ஏற்பட சராசரியாக 7 மணி நேரம் எடுத்தது.

இதனை நீதிமன்றில் சுட்டிக்காட்டினர் சேர். சிட்னி சிமித் —

ஆகவே திருமதி சதாசிவம், அவரது சடலத்தின் வெப்பநிலை அளவீடு செய்யப்பட்ட மாலை 6 மணிக்கு — 7 மணித்தியாலம் முன்பாக — அதாவது நண்பகல் 11 ...களுக்கு முரணாக இருப்பதும்—

எதிர்தரப்பு சாட்சியங்கள் இச்சான்றுகளுக்கு இயைந்து இருப்பதும் நீதிமன்றத்தில் உறுதி செய்யப்பட்டது.

அடுத்தது மிக முக்கியமான விடயம் - கொலை எங்கே நடந்தது, என்ன நிலையில்நடந்ததுஎன்பது மருத்துவரீதியில் நீதிமன்றில் ஆராயப்பட்டது.

சேர். சிட்னி ஸ்மித் தமது சாட்சியத்தில் அதை உறுதிப்படுத்தி, வெளிப்படுத்திய பாங்கு...

## சட்டத் துறையில் மருத்துவ இயல்

...துக் கொல்லப்பட்ட போது அவர் தம்மை அறியாமலேயே சிறுநீர் கழித்திருக்கிறார்.

திருமதி சதாசிவம் நிலத்தில் வீழ்த்தி கொல்லப்பட்டிருந்தால் அவ்வேளையில் அவர் கழித்த சிறுநீர் உள்ளாடைகளில் குளம்போல் தோய்ந்திருக்கவேண்டும்.

ஆனுல் டி. சேரத்தின் அறிக்கையின்படி திருமதி சதாசிவத்தின் உள்ளாடையில் ('லெற்றிகோர்ட்டில்') சிறுநீர் ஒரு சீராக மேலிருந்து கீழே ('ஹெம்') வரை ஓடியிருந்த அடையாளம் காணப்படுகிறது.

ஆகவே திருமதி. சதாசிவம் வில்லியம் கூறியது போல் நிலத்தில் வீழ்த்திக் கொல்லப்படவில்லை. நிற்கவைத்த நிலையிலேயே கொல்லப்பட்டிருக்கிருர்.

நின்றநிலையில் வைத்துத்தான் திருமதி, சதாசிவம் கொலைசெய்யப்பட்டார் என்பதை சில...

திருமதி. சதாசிவம் வீட்டில் எப்பகுதியில் வைத்துக்கொலைசெய்யப்பட்டார் என்பதைத் தமது மருத்துவ அறிவின் மூலம் சேர். சிட்னி ஸ்மித் விளக்கியதையும் அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம். (வளரும்)

(3) - தமிழில் தருபவர்: வித்தி -



மனைவி:- கோட்டையில் இருந்து ஷெல்லடிக்கிருங்களாம் வாங்க ஓடுவம்.

கணவன்:- இருபதுவருடமா உன்னுடைய சொல்லடியைத் தாங்கிய எனக்கு ஷெல்லடி ஒண்டும் பெரிசில்லை.

—பூம்பொழிலன்

# ஆளும் இந்திரா காங்கிரஸினுள் வெளியார் சக்தி ஊடுருவல்?

இரண்டு வாரங்களுக்கு முன்னர்—

முன்னுள் மத்திய அமைச்சர் ஆரிப் முஹம்மது கானின் புதுடில்லி வாசஸ்தலத்தில் தேநீர் விருந்து வைபவம் ஒன்று நடைபெற்றது.

பெருந்தொகையான பத்திரிகையாளர்இதற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

முன்னுள் மத்திய அமைச்சர் வி.பி.சிங், முன்னுள் உள்துறை இணை அமைச்சர் அருண் நேரு ஆகியோர் இந்த தேநீர் விருந்துஉபசாரத்தில் கலந்து கொண்ட முக்கியமானவர்கள்.

திரு. வி. பி. சிங்கின் பிறந்த தினத்தைக் கொண்டாடுமுகமாக ஜனப். ஆரிப் முகம்மது கான் இவனை ஒழுங்கு செய்திருந்தார் என்பது தான் மிக முக்கிய விஷயம்.

ஆனுல் இந்த வைபவத்தை ஆளும் இந்திரா காங்கிரஸினுள் பலம் பொருந்திய எதிரணியின் 'பிறந்ததினவிழா' ஆக புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் கருதியது.

புதிய ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னர், எதிரணியினர் பகிரங்கமாகச் செயல் படதிட்டமிட்டிருந்தனர்.

ஆனுல் பிரதமர் ராஜீவ்காந்தி முந்தி விட்டார்.

மூன்று எம்.பிக்களை இந்திரா காங்கிரஸில் இருந்து திரு. காந்தி வெளியேற்றி விட்டார்.

இவர்களில் முக்கியமானவர் அருண்நேரு.

### யார்இந்த அருண்நேரு

பண்டிதர் ஜவகர்லால் நேருஜியின் நேரடிக் குடும்ப வழித் தோன்றல் நேருஜியின் தந்தை...

...ரர்களில் ஒருவரின் புதல்வர்.

இந்திரா காந்தியின் மறைவின் பின்னர் திரு. ராஜீவ்காந்தி பிரதமரானார்.

அதைத் தொடர்ந்து திடீர்ப் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு திரு. ராஜீவ் காந்தி உத்தரவிட்டார். அரசியலுக்கு அவர் புதிது. அதனுல் நம்பிக்கைக்குரிய உறவினர்களையும் பாடசாலை நண்பர்களையும் கொண்ட அணி ஒன்றை திரு. காந்தி திரட்டினர்.

உறவினர்களிலே முக்கியமானவராக திரு. அருண்நேரு இருந்தார்.

பாடசாலை நண்பர்களிலேயேமுக்கியமானவர் அருண்சிங். இவர் இன்னும் மத்திய அமைச்சரவையில் பாதுகாப்பு இணை அமைச்சராக இருக்கின்ருர்.

அருண்நேரு உள்துறை இணை அமைச்சராக இருந்தபோதே இந்திரா காங்கிரஸினுள் அதிருப்தி ஏற்பட்டு இருந்தது.

நேரு குடும்பத்தின் பெயரைப் பாவித்து கட்சிக்குள் தனது செல்வாக்கை நிலைநாட்டுவதில் ஈடுபட்டிருந்தார் என்பதே அக் குற்றச் சாட்டு.

இத்தருணத்தில் இருதய நோய் வந்தது அருண் நேருவுக்கு.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த சமயத்தில் அவரிடமிருந்த இணை அமைச்சர் பதவி எடுக்கப்பட்டு பழனியப்பன் சிதம்பரத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

அதன் பின்னர் அருண் நேரு 'தானும் தன் பாடும்' என்ற நிலையில் இருந்து வந்தார்.

### ஆரிப் முகம்மது

முஸ்லிம் மதச் சட்டத் திருத்தம் ஒன்று சம்பந்தமாக ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக மத்திய அமைச்சர் பதவியை ராஜிஞமாச் செய்தவர்தான் ஆரிப் முகம்மது கான்.

அப்போதெல்லாம் மத்திய அமைச்சராகப் பணி புரிந்தவர் விஸ்வநாத் பிரதாப் சிங்.

### வி. பி. சிங்

நிதி அமைச்சர் பதவியில் இருந்து தந்திரமாகக் கழற்றப்பட்டு, பாதுகாப்பு அமைச்சர் பதவிக்கு மாற்றப்பட்டவர் வி. பி. சிங்.

சுவீடிஷ் பொபோர்ஸ் நிறுவன ஆயுத பேர ஊழல், ஜேர்மன் நீர் மூழ்கிக் கப்பல் பேர ஊழல் ஆகியவற்றை வெளிக்கொண்டு வந்தவர் வி. பி. சிங்.

அதைத் தொடர்ந்து அமைச்சர் பதவியை திரு. சிங் தூக்கி எறிய வேண்டியதாயிற்று.

'சுத்தமானவர்' நான் தான்; பிரதமர் காந்தி அல்ல— இப்படியான தோரணையில் வி.பி. சிங் கூட்டங்களில் பேசினர். பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

இப்படி ராஜீவ் தலைமையில் அதிருப்தி கொண்ட பலர் ஒன்று சேர்க்கப்படவும் கொண்டு...

எதிரணி ஒன்றை இந்திரா காங்கிரஸுக்குள் உருவாக்க எண்ணினர்.

### ஹரியானு தேர்தல் முடிவுகள்

இதற்கு பெருந்துணை புரிந்தது, ஹரியானுவில் ராஜீவின் தலைமையிலான இந்திராகாங்கிரஸுக்கு ஏற்பட்ட படுதோல்வி.

படுதோல்விக்குக் காரணம் ஹரியானுவில்...

## அருண்நேரு வெளியேற்றம் எதைக் காட்டுகிறது?

பஜன்லால் - பன்சிலால் கோஷ்டிகளுக்கு இடையேயான குத்துவெட்டும் தேவிலாலின் 'கடன் தள்ளுபடி செய்யபடும்' என்ற ஆசை வார்த்தையும்.

ஆனுல் அதிருப்தி கொண்ட முன்னுள் அமைச்சர்கள் குழுவோ ராஜீவின் செல்வாக்கு குன்றிவிட்டது என்று கணக்குப்போட்டது.

கணக்கு தப்போ, சரியோ, எதிரணி பகிரங்கமாக செயல்படுவதற்குத் தருணம் பார்த்திருந்தது.

### அதிருப்தி அணி

ராஜீவைத் தட்டிக் கேட்கும் அளவுக்குப் பல முள்ளதாக்கும் முயற்சி...

...யில் அருண்நேரு, ஆரிப் கான் குழு மாநிலமட்டத்திலும் அதிருப்தியாளர்களை அணிதிரட்டத் தொடங்கியது.

மேற்கு வங்காள சட்டசபைத் தோல்வியைத்...

**- தீபன்ராஜா -**

தொடர்ந்து மத்திய சட்ட அமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்த ஏ.கே. சென், ஊழல் குற்றச்சாட்டில் அமைச்சர் பதவியை ராஜிஞமாச் செய்த கனிஹான் சௌத்ரி,

மத்தியபிரதேச எம்.பி வித்யா சரண்சுக்ளா, பீஹாரைச் சேர்ந்த ஜானுத் மிஸ்ரா, மகாராஷ்டிர முன்னுள் முதலமைச்சர் வசந்தராவ் பட்டில் (தற்போது ராஜஸ்தான் ஆளுநராக இருக்கின்ருர்) ஆகியோர் எல்லாம் இந்த அணியில் திரண்டனர்.

பல காரணங்களுக் காசப் பிரிந்துசென்றவர் ... தலை ... கொடுக்கவேண்டும் ... காரணத்துக்காக ஒன்றுதிரண்டனர்.

இந்திரா காங்கிரஸி...

...லும் மத்திய அமைச்சரவையிலும் பெரும் மாற்றங்களைச் செய்ய பிரதமர் ராஜீவும் ஏற்கனவே திட்டம் தயாரித்து வைத்திருக்கின்ருர்.

ராஜீவும் ஜனுதிபதி தேர்தல் முடியட்டும் என்றுதான், காத்திருந்தார்.

இதனிடையில் எதிரணியும் தங்கள் திட்டத்தைச் செயற்படுத்த ஜனுதிபதி தேர்தல் முடியட்டும் என்றுதான் காத்திருந்தது.



ராஜீவ்காந்தி

ஆனுல் ராஜீவ் முந்தி விட்டதால் எதிரணியினர் இப்போது நிலைகுலைந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து திரு. வி. பி. சிங்கும் ராஜ்ய சபை உறுப்பினர் பதவியில் இருந்து ராஜிஞமாச் செய்யும் கடி...

...தத்தை பிரதமருக்கு கடந்தவியாழன் அனுப்பி வைத்துள்ளார்.

''அருண் நேரு ஆகியோரைக் கட்சியில் இருந்து வெளியேற்றியது ஜனநாயக விரோத செயல். கட்சியின் நலனுக்கு எதிராகச் செயல்படுவதாக நீங்கள் நினைத்தால் நானும் விலகிக் கொள்ளத் தயார் —இப்படி திரு. சிங் தனது கடிதத்தில் பிரதமருக்குத் தெரிவித்துள்ளார்.

திரு. சிங், பிரதமருக்கு ஒரு பெரிய தலையிடியாகி விட்டார்.

பெயர்பாக்ஸ், போபர்ஸ், ஜேர்மன் நீர் மூழ்கிக் கப்பல் வாங்கிய ஊழல்கள் குறித்து எழுந்த பிரச்சினைகள் முடியும் வரை திரு, சிங்கை தனது' நல்லெண்ணக்கட்டுப்பாட்டுக்குள்' வைக்கவேண்டிய நிலை பிரதமருக்கு ஏற்பட்டுள்ளது.

இப்பிரச்சினைகள் திரும் வரை சிங்கை வெளியேற்றுவது என்பது பல முறை யோசித்துச் செய்ய வேண்டிய காரியமாகி விட்டது.

இப்போது ஆகப் பெரிய தலைவலி பிரதமரை விட்டு நீங்கிவிட்டது.

புதியஜனுதிபதி தெரிவு செய்யப்பட்டு விட்டார். ஷெயில் சிங் தகராறுக்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டு விட்டது.

பிரதமர் ராஜீவ் கட்சியின் முக்கிய மூன்று பிரமுகர்களை திடீரென்று வெளியேற்றியது, எதிரணியினருக்கு 'வெண்ணெய் திரண்டு வரும் போது தாழி உடைந்த கதையாகி விட்டது. நாட்டை மட்டுமல்ல, ஆளும் கட்சியையும் பல வீனப்படுத்துவதிலும்...

வெளிநாட்டுச் சக்திகள் இறங்கி விட்டனவோ என்ற சந்தேகமும் புதுடில்லி வட்டாரங்களிலும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்திய நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் இம்மாதம் 27 இல் ஆரம்பமாகப் போகின்றது.

இது மழைக்காலக் கூட்டத்தொடர் என்ருலும் சூடான மோதல்களை எதிர்பார்க்கலாம் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

'ஜெயில்சிங்' சண்டத்தை வெற்றிகரமாகத் தாண்டிய பிரதமர் காந்தி, வி. பி. சிங் கண்டத்தையும் தாண்டி விடுவாரா?

இக்கேள்வி தான் புதுடில்லி வட்டாரங்களில் எழுப்பப்பட்டு உள்ளது.

## பொய்

மருத்துவன் பொய் சொன்னல்
—'சர்ட்டிபிக்கட்'
பொலீஸ்காரன் பொய் சொன்னல்
—'சாட்சியம்'
கவிஞன் பொய்சொன்னல் —'கற்பனை'
அரசியல்வாதி பொய் சொன்னல்
—'புள்ளிவிபரம்'
பத்திரிகை பொய் சொன்னல்
—'பரபரப்பான செய்தி'
வக்கீல் பொய் சொன்னல் —'வாதத்திறமை'
அமைச்சர் பொய் சொன்னல்
—'ராஜதந்திரம்'
—கலைமகள்

நன்றி : கல்கி (14.6.1987)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மனிதனின் சூட்சும சரீரங்கள்

மனிதன் என்றவுடன் நரம்பும், தசையும், எலும்பும், குருதியும் கொண்ட அவனுடைய உடம்புதான் எமது நினைவுக்கு வருகின்றது. மனிதனுக்குச் சொந்தமானது கண்ணுக்குத் தெரிகின்ற இந்த உடல் மாத்திரமல்ல, கட்புலனாகாத வேறு சரீரங்களும் அவனுக்கு உண்டு.

பொதுப்படையாக மனித சரீரங்களை ஸ்தூல சரீரம், சூட்சும சரீரம், காரண சரீரம் என்று மூன்று பகுதிகளாக ஆன்மீக நோக்காளர்கள் வகுத்துக் கூறுவர்.

இந்துமதம் மனித சரீரத்தை ஐந்து கோசங்களாக (Sheaths) பிரித்துக் கூறுகிறது. அதாவது ஆன்மாவை ஐந்து உறைகள் மறைத்துக் கொண்டிருக்கின்றன என்று வேதங்கள் கூறுகின்றன.

ஸ்தூல சரீரம் என்பது நாம் தொட்டு உணரக் கூடிய எமது உடல். சூட்சும சரீரம் எமது கண்களுக்குப் புலனாகாதது. (Subtle) ஆன்மீக உயர்நிலையை அடைந்த சித்த புருஷர்களால் மட்டும் காணவும் உணரவும் கூடியது.

சூட்சும சரீரம் ஆனது பிராணமய கோசம், மனோமய கோசம், விஜ்ஞான மயகோசம் ஆகிய கோசங்களை உள்ளடக்கியது. காரண சரீரத்தை ஆனந்தமய கோசம் என்று இந்து வேதங்கள் குறிப்பிடுகின்றன.

பிரம்மஞானிகள் பிராணமய கோசத்தை ஸ்தூல சரீரத்தின் ஒரு பகுதியென்றே கொள்வர்.

- அ. குமரகுரு -

பிராணமய கோசம் மனித உடலின் தோலில் இருந்து வெளிப்புறமாகக் கால் அங்குலம் அளவில் ஒளிவடிவாக உடலின் இரட்டை உருவாக இருந்து வருகின்றது.

இந்து வேதங்கள் பிராணசக்தியை மனித உடலுக்கு அளிக்கும் ஊடகம் இது என்ற காரணத்தினால் இதை ''பிராணமய கோசம்'' என்று கூறுகிறது.

மனோசரீரம் கீழ்மனத்தையும் விஜ்ஞானமய கோசம் உயர்மனத்தையும் குறிப்பிடுகின்றன. இரண்டு கோசங்களையும் பொதுப்படையாக மனோசரீரம் எனக் கூறலாம்.

மனோசரீரத்தின் மூலம் ஆன்மா திண்ணிய அறிவாற்றலாகத் தன்னை வெளிப்படுத்துகின்றது. இதில் மனதின் அபூர்வ சக்திகள், ஞாபக சக்தி, கற்பனைசக்தி ஆகியன விருத்தியடைகின்றன.

(7 ஆம் பக்கம் பார்க்க)



# ஆடிப் பிறப்பும் ஆடிக் கூழும்
# தமிழர்தம் பாரம்பரிய விழா

சூரியன் வடக்கு நோக்கிய உத்தராயணத்தில் தைப்பொங்கல் விழாவும் தெற்கு நோக்கிய தெட்சிணாயனத்தில் ஆடிப்பிறப்புக் கூழ் அடு விழாவும் தமிழ் மக்களால் கொண்டாடப்படுகின்றன. சூரியனைப் பொங்கலாலும் கூழாலும் ஆராதனை செய்கிறார்கள்.

தமிழர் பண்பாட்டிலே ''கூழ் அடுதல்'' என்னுந் தொடர் பரணி இலக்கியத்தினூடாக அறியப்படுகிறது. 3 ஆம் குலோத்துங்கமன்னனின் சேனைத் தளபதியாகிய கருணாகரத் தொண்டமான் கலிங்கப் போரிலே படை பொருது வெற்றிவாகை சூடுகிறான். அப்போர்க்களத்திலே வெற்றிக் களிப்பைக் கொண்டாடும் வகையில் பேய்க் கணங்கள் கூழ் அட்டுக் கூட்டம் கூட்டமாகக் கூடிக் குடித்துக் களிப்பதை கலிங்கத்துப்பரணி நகைச்சுவை படச் சித்திரித்துக் காட்டுகின்றது. பரணி இலக்கியம் கூறும் ''கூழ் அடுதல்'' நிகழ்ச்சி வெற்றியின் சின்னமாகக் கூட்டு நிகழ்வின் அறிகுறியாக, விருந்துபசாரத்தின் பாங்கில் நிகழ்கின்றது.

### சமதர்மம்

விழாக் கொண்டாடப் பணந்தேவை. பணமற்றவனுக்கு விழா வேதனையாகவே முடிந்து விடும். ஆயினும் ஒருவன் ஏழையாயினும் அவன் கூழ் குடிக்கும் அளவுக்குப் பாக்கியம் பெற்றிருப்பான் என்பதில் ஐயமில்லை. ஆதலினாலேயே ஏழை பணக்காரர் என்ற பேதமின்றி, யாவரும்

> நேற்று ஆடிப் பிறப்புக் கூழ் அடு விழா. அதையொட்டி இக்கட்டுரை வெளியாகிறது.

ஒரு நாள் தத்தம் வசதிக்கேற்பகூழ்அட்டு உறவினருடன் உண்டு களியாட்டு நடத்தும் ஒரு விழாவாக ஆடிப்பிறப்பும் ஆடிக்கூழ் விழாவும் அமைந்துள்ளன.

### கோயில்களில்

முன்னைய நாட்களில் தமிழகத்திலும் ஈழத்திலும் இவ் விழா சிறப்பா

**சிறப்புக் கட்டுரை**

கக் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. ஈழமக்கள் இவ் விழாவினைக்கோயில் களிலும், இல்லங்களிலும் கொண்டாடி வந்திருக்கிறார்கள்.

ஆடிமாதம் பூரணைத் தினத்தில் கோயில்களில் கூழ்காய்ச்சிப் படைத்து, அடியார்கள், அன்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் கூழ் வார்த்துக் கொடுத்து, உண்டு களிக்கும் மரபு வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மிக அண்மைக் காலம் வரை இடம்பெற்று வந்துள்ளது. கிழக்குமாகாணத்திலே குறிப்பாகப் பிள்ளையார் கோயில்களிலே ஆடிக்கூழ் காய்ச்சும் வைபவம் நடைபெற்று வந்தமையை ஈண்டுசுட்டிக் காட்டுதல் பொருத்தமாகும்.

சோமசுந்தரப்புலவர் பாடிய ஆடிப்பிறப்பு

- கலாநிதி இ. பாலசுந்தரம் -

என்ற பாட்டு மூலம் சோமசுந்தரப் புலவர் காலத்திலே ஆடிப் பிறப்பு ஒரு தேசிய விழாவாகக் கொண்டாடப்பட்டமை அறிய வருகிறது.

### சம உணவு

பனங்கட்டி, பயறு, தேங்காய்ப்பால், அரிசிமா என்பன சேர்த்துக் கூழ் காய்ச்சப்படும். அத்துடன் கொழுக்கட்டையும் அவித்தெடுக்கப்படும். இவற்றுடன் முக்கனிகளும் சேர்த்துக் கொள்ளப்படும்.

### பிதிர்வழிபாடு

ஆடி மாதத்தைக் 'கனத்த மாதம்' எனக் கூறுவது மரபு. அம்மாதத்தில் திருமணம், புதுமனைபுகுதல் முதலாம் மங்கள கருமங்கள் நிகழ்தல் தவிர்க்கப்படும். பிதிர்களுக்குரிய மாதம் ஆகவும் ஆடி மாதம் கொள்ளப்படுகின்றது பிதிர்களுக்குரிய திசைதெற்கு ஆடிமாதத்தில் சூரியன் தென்திசை நோக்கி இயங்குவதால் இக்கோட்பாடு தோற்றம் பெற்றிருக்கலாம். ஆதலினாலேயே இறந்தோருக்குரியதான ''மாசியம்'' மற்றும் பிதிர்க்கடன்கள் இம்மாதத்தில் பெரும்பாலும் நடத்தப்படுகின்றன.

மக்கள் மத்தியில் சமத்துவம், சம உணவு, விழாவுணர்ச்சி ஆகிய அம்சங்களைத் தன்னகத்தே கொண்ட பண்பாட்டுப் பாரம்பரியம் மிக்க 'ஆடிப்பிறப்பு நிகழ்வையும் - 'ஆடிக் கூழ்' உணவையும் நாம் மீண்டும் நினைவுபடுத்துதல் அவசியமாகின்றது. ★

# சரணடைய மாட்டோம்

உலகில் எந்த நாகரிகம் வாய்ந்த அரசும் ஜெயவர்த்தனா அரசாங்கத்தைப் போன்று தனது சொந்தப் பிரதேசத்தில் குண்டு பொழிந்து தனது சொந்த மக்களைக் கொன்று குவித்ததில்லை. கொலை, கற்பழிப்பு, கொள்ளை, வாசிகசாலை எரிப்பு, கோயில்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் அழிப்பு, அவமதித்தல், மதகுருமார் உட்படப் பலரைக் கொல்லல்— இப்படி எத்தனை அநியாயங்கள்.

### பழிவாங்கல்

இவை எல்லாம் எதற்காக? பழிவாங்கும் நடவடிக்கை என்பதே வெளிப்படையான ஒரு பதிலாகும்.

இவை போராளிகளுக்கு எதிரான பழிவாங்கல் நடவடிக்கைகள் அல்ல. 1982 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜயவர்த்தனாவுக்கு வாக்களிக்க மறுத்த—

அவ்வாண்டு இறுதியில் நாடாளுமன்றத்தின் கால எல்லையை நீடிக்க நடத்திய சர்வஜன வாக்கெடுப்பில் ஜே. ஆருக்கு ஆதரவு கொடுக்க மறுத்த—

தமிழ் மக்களுக்கு எதிரான பழிவாங்கல் நடவடிக்கைகள் இவை.

கொழும்பு குண்டு வெடிப்புக்குத் தாம் பொறுப்பில்லை என்று தமிழ்க்குழுக்கள் அறிக்கை விட்டுள்ளனவே. அவர்கள் தாம் பொறுப்பு என்பதற்கு அரசிடம் ஆதாரம் இல்லை என்று வெளிநாட்டுச் செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனரே. இது ஓர் உள்ளக செயற்பாடு என்று எதிர்க்கட்சியினர் கூறியுள்ளார்களே. இப்படியிருக்க அரசு வேறுவித பிரசாரம் செய்கிறது.

> [இங்கிலாந்தில் வெளியாகும் TAMIL TIMES பத்திரிகையின் மேமாத இதழில் வெளிவந்த ஆசிரியர் தலையங்கத்தின் சாரம் இங்கு தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு உள்ளது.]

தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆர். நிவாரணம் வழங்குவதையிட்டுப் புகார் கூறியுள்ளார் ஜே. ஆர். ஆபிரிக்கா, இஸ்ரேல் கூலிப்படையினரை இங்கு அழைக்கும் நடவடிக்கைகளுக்கு உலகு அங்கீகாரம் அளிக்கும் என்று ஜே. ஆர். எதிர்பார்க்கிறாரா?

இந்திய அரசியல் சாசனத்தைச் சுட்டிக்காட்டி வெளிவிவகாரம் மத்திய அரசின் கடப்பாடு என்று லலித் கூறுகிறார். மனித நேய உதவி வழங்குவது வெளிவிவகாரப் பிரச்சினை அல்ல என்பதை அவர் உணர வேண்டும். எமது தமிழர்களுக்கு உலகின் பல நாடுகளைச் சார்ந்த அமைப்புக்கள்

(7-ஆம் பக்கம் பார்க்க)

# மறுமலர்ச்சிக் காலக் கடிதங்கள் கூறும் விமர்சன இலக்கியச் சிந்தனை விழுமியம்

ஈழத்தில் வெளிவந்த இலக்கியத் தரம் வாய்ந்த சிறு சஞ்சிகைகளில் 'மறுமலர்ச்சி' முதன்மை வாய்ந்தது. யாழ்ப்பாணம் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம் 1946 ஆம்ஆண்டு முதல் 1948 ஆம் ஆண்டு வரை மறுமலர்ச்சியை வெளியிட்டது. புதுமை வேட்கை மிகுந்த தி. ச. வரதராசன் (வரதர்) இதன் அச்சாணியாகத் திகழ்ந்தார். வரதருடன் அ.செ.முருகானந்தன் (1-16 இதழ்கள்) ச. ப.சர்மா (17-23 இதழ்கள்) மறுமலர்ச்சி ஆசிரியர்களாகப் பணிபுரிந்தனர். மறுமலர்ச்சிச் சங்கத்துடனும் மறுமலர்ச்சி இத



ச. ப. சர்மா

ழுடனும் தொடர்பு கொண்டிருந்த எழுத்தாளர்கள் மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் எனப்படுகின்றனர்; ச.ப.சர்மா மறுமலர்ச்சி இதழ்களைப் பாதுகாத்து ஆய்வாளர்களுக்கு வழங்கிவருகிறார்.

பவள விழா ஆண்டை நெருங்கிக்கொண்டிருக்கும் பன்மொழி அறிஞரான பண்டிதர் ச. ப. சர்மா (12.11.1916) மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் பலருடைய கடிதங்களைக் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பேணிப் பாதுகாத்துவருகிறார். அண்மையில் சர்மாவின் இல்லத்திற்குச் சென்றபோது விமர்சன மதிப்பும் வரலாற்றுப் பெறுமதியும்மிக்க இக்கடிதங்களைப் பார்வையிடும் வாய்ப்புக் கிடைத்தது. அக்கடிதங்கள் சிலவற்றுக்கு 'மறுமலர்ச்சி' அளிப்பது பயனுள்ள

கவீந்திரன், சிப்பி, சலையரசன், பண்டிதர், திருமலைராயர், புருனே, ஏ, என். கே முதலிய புனைபெயர்களுள் மறைந்துநின்று கவிதை, சிறுகதை, நாவல், திறனாய்வு, நாடகம் முதலிய பலதுறைகளிலும் தமது முத்திரையைப் பதித்துப் புகழ்பெற்றவர் மறுமலர்ச்சி எழுத்தாளர் அ.ந. கந்தசாமி. அ. ந. க. அவர்கள், அ.செ.மு, ச. ப.ச ஆகியோருக்கு எழுதிய கடிதங்கள் அவரின் இலக்கிய சமூக நோக்கையும் ஆளுமையையும் புலப்படுத்துவன.

ச. ப. சர்மாவும்

மயிலங்கூடலூர் பி. நடராசன்

'சாரதா' என்ற பெயரில் புகழ்பெற்ற கவிஞர் க. இ. சரவணமுத்துவும் இணைபிரியாத இரட்டையர்கள். அவர்கள் இருவரும் ஈழகேசரியிலும் மறுமலர்ச்சியிலும் 'இரட்டையர்' என்ற புனைபெயரில் பலகட்டுரைகளை எழுதியுள்ளனர்.

மறுமலர்ச்சியின் பதிப்பாளராக விளங்கியவர் நாவற்குழியூர் க. செ. நடராசன் இம்மூவரும் அ. ந. க. அவர்களின் இனிய நண்பர்கள்.

அ. ந. க. கொழும்பிலிருந்து 'இரட்டையருக்கு' எழுதிய கடிதமொன்று இம்மூவரையும் பற்றிய அவரது கருத்துக்களுடன் தொடங்குகிறது:

(1)

'அன்பிற் சிறந்த நண்பர்களுக்கு,

வணக்கம். தாங்கள் நல்ல சுகமேயிருக்கிறீர்களென்று நம்புகின்றேன்.

நிற்க. யாழ்ப்பாணத்தில் இலக்கிய உலகில் 'இரட்டையர்களாகப்' பிரவேசித்திருக்கும் நீங்கள் புத்தம் புதிய போக்கிற் சென்று கொண்டிருக்கிறீர்கள். அது மகிழ்வுக்குரியதே. உங்களில் க. இ. சரவணமுத்து எழுதிய 'சொர்ப்பனராணி' முதலிய கவிதைகளைக் கண்டேன். ரசிக்கத் தக்கதாக அமைந்திருந்தது. இரட்டையர்களுடன் இரண்டறக் கலக்கும் மூன்றுவது நண்பர் நாவற்குழியூர் நடராசனது கவிதைகளையும் காலத்திற்குக் காலம் கண்டு, தமிழ்மொழியின் எதிர்கால மகோன்னதத்திற்கு எனது நண்பர்கள்தான் காரணமாக இருக்கப்போகிறார்கள் என்ற எண்ணம்கொண்டு மிக மகிழ்வடைகிறேன்.'

கருத்து முரண்பாடு ஏற்படும்போது அவற்றை



வரதர்

வெளிப்படையாக விவாதிக்க அ.ந.க. தயங்கியதில்லை. 'இரட்டையர்' ஈழகேசரியில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் பற்றிப் ''பகுத்தறிவாகுமா?'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார். கடிதம் இக்கட்டுரை பற்றிய விமர்சனமாகத் தொடர்கிறது. முதலில் விவாதம்பற்றிய தமது நோக்கை அ.ந.க. தமது கடிதத்தில் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்:

''தாங்கள் சமீபத்தில் எழுதிய 'பகுத்தறிவாகுமா?' என்ற கட்டுரையை வாசித்தேன். தங்கள் கருத்துக்களுடன் மாறுபட்ட கொள்கையினனாகிய யான் ஓர் மறுப்பு எழுதி அனுப்பியிருக்கிறேன், (ஈழ) கேசரிக்கு இலக்கிய விஷயமாக இப்படி நேரும் விவாதங்கள் நட்பை வளர்க்கவும் ஒருவரை ஒருவர் கூடுதலாக அறிந்துகொள்ளவும் உதவும் என்பது எனது கருத்து. என்ன சொல்கிறீர்கள்?''

விவாதங்கள் நட்பை வளர்க்கவும் கஷ்டம் ஒருவரை ஒருவர் கூடுதலாக அறிந்துகொள்ளவும் விடயத்தை மேலும் விளங்கிக்கொள்ளவும் உதவும் என்பதை விமர்சகர்களில் எத்தனைபேர் ஏற்றுக்கொள்கின்றனர்? தாம் பிறரைப்பற்றிக் கண்டிக்கலாம். பிறர் தமது கருத்துக்களைக் கண்டிக்கக்கூடாது என்று கருதும் விமர்சகர்களையும் சந்திக்கின்றோம். ஆனால், அ.ந.க. இதற்கு விதிவிலக்காகக் 'கொடுக்கவும் வாங்கவும்' தயாராக இருப்பதைக் காண்கிறோம்.

மறுமலர்ச்சியில் (2:8. சர்வசித்து, பங்குனி) அ.ந.க. எழுதிய 'கலைக் கடிதம்' ஒன்றில் 'வாதமுறை' பற்றிய தமது கருத்தைப் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்:

'...இன்று தமிழுலகில் வாதங்கள் சரியான முறையில் நடைபெறவில்லை. வாதஞ் செய்வோர் 'வெற்றியாருக்கு?' என்ற தோரணையில் செல்கிறார்களேயொழிய, வாதத்தின் பயனாய்ச் சரியான முடிவுக்கு வருவோம் என்று சிந்திப்பதாய் தெரியவில்லை. இவ்வித நோக்கோடு செய்யப்படும் வாதம் நிஷ்பிரயோசனமான விதண்டாவாதம் என்பதிற் சந்தேகமில்லை. பரஸ்பரம் பிழைகளை அனுமதித்து, உண்மைகளை ஏற்றுச் செயற்படும் வாதமே மிகுந்த பயனளிக்கக் கூடிய மனித வாழ்வுக்கு இன்றியமையாத தன்மைகொண்ட, அறிவுப்புடமிடப்படும் உலைக்களமாகும் என்பது என் கருத்து. நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?'...

மறுமலர்ச்சிக் குழுவில் 'எதிர்க்கட்சியாளராக' இருந்த அ.ந.க. முற்போக்கு இலக்கியக் குழுவிலும் 'எதிர்க்கட்சியாளராகவே' இருந்தார். இதற்கு அவரது விரிந்த மனப்போக்கே காரணமாகும்.

# கம்பன், கம்பன் ஆய்வுகள் - விழாக்கள்

தமிழ் உலகில் கம்பனுக்கு அறிமுகம் அவசியமில்லை. இராமாவதாரம் என்ற பெருங்காப்பியத்தின் மூலம் தமிழிலக்கியத்திற்கு அனைத்துலக இலக்கியத் தரத்தை ஈட்டித்தந்த பெருங்கவிஞன் அவன். கம்பராமாயணம் என வழங்கப்படும் இராமாவதாரப் பெருங்காப்பியம் கதையம்சத்தில் கங்கையையும் இலங்கையையும் இணைத்தமைந்தது; அப்பெரும் பிரதேசப் பரப்பின் சமூக மாந்தருடாகத் தமிழரின் பண்பாட்டு வளத்தை வெளிப்படுத்திய சிறப்பு வாய்ந்தது. இவ்வகையிற் கம்பன் தமிழர் பண்பாட்டுக்கு ஓர் அனைத்திந்திய — தென்னாசிய பண்பாட்டுப் பரிமாணத்தைப் புலப்படுத்திய சாதனையாளனும் ஆகிறான்.

கம்பன் தனது காப்பியத்துக்கான கதையம்சத்தினை வடமொழியிலிருந்து பெற்றுக்கொண்டவன். அக்கதையம்சம் கம்பனுக்கு முன்னரே தமிழ் நாட்டில் நன்கு அறிமுகமாகியிருந்தது. சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், பக்தி

கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளமை இதற்குச் சான்றுபகரும்.

### கலைக்காப்பியம்

இவ்வாறு மக்களுக்கு ஏற்கனவே அறிமுகமாகியிருந்த பிறமொழிக் கதைப்பொருளைத் தேர்ந்து கொண்ட கம்பன் அதனை ஒரு பெருங்காப்பியமாக அமைப்பதில் காட்டியுள்ள கலைத்திறனே - புனைதிறனே - அவ்விலக்கியம் அனைத்துலகத் தரத்தை எய்தியதற்கான அடிப்படையாகும். காப்பிய வரலாற்று நோக்கில் அணுகுபவர்கள் வடமொழிமூலமான வான்மீகி இராமாயணத்தை வளர்ச்சிக் காப்பியம் (Epic of grouth) எனவும் கம்பராமாயணத்தைக் கலைக் காப்பியம் (Epic of art) எனவும் குறிப்பிடுவர். வளர்ச்சிக் காப்பியம் என்பது குறித்த ஒருவரால் ஒரு காலகட்டத்தில் அமைக்கப்

- கலாநிதி நா. சுப்பிரமணியன் -

படாது பல தலைமுறைகளாக உருவாகிவளர்ந்த காப்பிய அமைப்பினைச் சுட்டிநிற்பது. வான்மீகி ராமாயணத்தில் இப்பண்பினை அவதானிக்கலாம்.

பது ஒரு கவிஞன் திட்டமிட்டுச் செப்பமாக அமைத்துக் கொள்வது. கம்பன் ஒருவனே தன் முழுக்கலைத் திறனையும் பயன்படுத்திச் செப்ப

> அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர் கடந்த ஏழாண்டுகளாகத் தொடர்ந்து நடத்திவந்துள்ள கம்பன் விழாக்களில் கவின்மிகு பயன்பாட்டுச் சிறப்பை அவதானிக்க முடிகிறது. சமகாலச் சமூகப்பிரச்சினைகளுடன் தொடர்புடைய தலைப்புக்களிற் பட்டிமண்டபங்கள், கருத்தரங்குகள், கவியரங்குகள் என்பவற்றினை அவர்கள் நிகழ்த்தி வந்துள்ளனர்.
>
> அவ்வகையில் இந்தமாதம் 17, 18, 19ஆம் திகதிகளில் நிகழ்கின்ற கம்பன் விழா சமநிலைப் பயன்பாடுடையதாக அமையும்.

மாக அமைத்துக் கொண்ட கலைக்காப்பியம் கம்பராமாயணம். இவ்வாறு செப்பமாக அமைக்கும் முயற்சியில் அவன் மூலகாப்பியத்தினின்று எவ்வெவ்வியல்பு[illegible] வேறுபட்டான் [illegible] இலக்கிய ஆய்விற் சுவையும் பயனும் மிக்கதொரு முயற்சியாக அமையும்.

பாளி என்ற நிலையிற் கம்பன் புலப்படுத்தி நிற்கும் உயர்நிலையிலான புனைதிறன்கள் பல. குறிப்பாகக் கதை மாந்தரது குண நல சித்திரிப்புத் திறன், நடைத்திறன் என்பவற்றைச் சுட்டலாம். உலகியலையும் உளவியலையும்நன்குதெளிந்து கொண்டு மாவட்டத்திற்கும் அதிமாவட்டத்திற்குமான எல்லைக் கோட்டினை நன்கு வரையறை செய்து கொண்டு கதைமாந்தரை இயங்க வைத்து[illegible] சேர்த்த [illegible]களால் சுவைபடக் கதையினை நடத்திச் சென்றுள்ள முறைமையிலும் கம்ப

பாளிகள் பிறர் எவரையும் ஒப்பு நோக்கலாமா என்று சிந்திப்பதே கடினமானதொன்றாக உளது.

### மதிப்பீடு முயற்சி

கம்பனை சுவைத்துப் போற்றிப் பேணிவந்த மரபிலிருந்து விலகி அவனது தரத்தை மதிப்பிடும் முயற்சியை முதலில் தொடக்கி வைத்த பெருமை வ. வே. சு. ஐயர் அவர்களைச்சாரும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் கம்பனைப் பற்றிப் பெருந்தொகையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழிலக்கியப் பரப்பில் வேறெந்தப் படைப்பாளியையும் விடக் கம்பனே ஆய்வாளர் கவனத்தை அதிகம் கவர்ந்தவன் என்ற உண்மை புலப்படுகின்றது.

### வெகுஜன ஈடுபாடு

இவ்வாறு ஆய்வாளர்க்குப்பயன்பட்டு வந்துள்ள கம்பனைப் பொதுமக்கள் சுவைப்பதற்கு வகை செய்யும் கலாசார நிகழ்ச்சிகள் என்ற வகையிலேயே கம்பன் விழாக்கள் அமைந்துவந்துள்ளன. தமிழ்நாட்டிற் பல ஆண்டுகளாக நடத்தப்பட்டு வரும் காரைக்குடி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## [illegible]

'**மா**ப்பிள்ளை அம்மன் கோவிலடிக்கு வந்தாச்சு; இஞ்சையெல்லாம் 'றெடி' தானே?' என்று கேட்டபடி, வேகமாக வந்து உலுப்பிவிட்டு நின்ற காரிலிருந்து இறங்கினுன் சிவப்பிரகாசம்.

காலையிலிருந்தே 'முருக பவனம்' சனமும், சந்தடியுமாக 'கலியாண, அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. அங்கே ஒலிபரப்பி பாடியதுடன் இன்னும் எங்கெல்லாமோ இருந்து மூன்று-நாலு ஒலிபரப்பிகள் வெவ்வேறு ராகத்தில்-தானத்தில் - உணர்ச்சி பேதத்தில் – பாட எல்லாம் சேர்ந்து ஒரே இரைச்சலாகி நாவற்கேணிக் கிராமமே 'அசுர கீத'த்தில் ஆழ்ந்து கொண்டிருந்தது. ஓரிடத்தில் யாரோ ஒரு ரசிகர் ஒலிப்பதிவுநாடாவை நிற்பாட்டிவிட்டுத் தம் சொந்தக் குரலில் 'இரண்டு மனம் வேண்டும்...' என்றது பலருக்குச் சிரிப்பூட்டியது.

'அடுத்த மாதம் நல்ல காரியங்களுக்கு முகூர்த்தம் இல்லையாம். அது தான் இப்படி எல்லா இடங்களிலும்...' என்று யாருக்கோ விளக்கமளித்துக் கொண்டிருந்தார் தாத்தா பரமானந்தம்.

எல்லாரும் பந்தல் முகப்பில் வந்து ஆயத்தமாக நின்ருர்கள். மாப்பிள்ளை ஊர்வலம் சமீபித்து விட்டது. மேளத்துடன் கலந்து நாதஸ்வரம், 'காஞ்சிப் பட்டுடுத்துக் கஸ்தூரிப் பொட்டு' வைப்பது திருப்பத்திலேயே கேட்டது.

திடீரென்று ஒரு அதிர்வு. தூரத்திலிருந்து 'டுடும்!'—

திடுக்கிட்டுக் கொஞ்ச நேரம் நின்றவர்கள், 'பெடியள் ஏதாவது செய்திருப்பாங்கள்!' என்று ஒருவருக்கொருவர் சமாளித்துக் கொண்டு மீண்டும் அலுவல்களைக் கவனிக்கலானுர்கள். ஆனுல்......

மறுபடியும் ஒரு முழக்கம்! சில துப்பாக்கி வேட்டுக்கள்!!—

சனங்கள் திகைத்தார்கள். ஆனுலும் பயந்தவர்களும் கூடச் சிதறி ஓடவில்லை.-அது எங்கோ தூரத்திற் தானே?— கல்யாணம் தளர்ச்சியுடன் தொடர்ந்தது.

துப்பாக்கி வேட்டுக்களும், குண்டுச் சத்தங்களும் தொடர்ந்தன. சற்றுக்கெல்லாம்'ஹெலிகொப்ரர்' வரும் ஓசை கேட்டது. வட்டங்கள் 'பாட்டுக்' காட்டுவது விளங்கிற்று.

நிசப்தத்தில் வெடியோசைகள் தெளிவாகக் கேட்டன. 'ஹெலி'யும் சுட ஆரம்பித்து விட்டது.

கிழவர்பரமானந்தரின் முகத்தில் அளவில்லாத பரபரப்புக் காணப்பட்டது. வெளியே வந்து விட்டார். அவர் மட்டுமல்ல, அநேகமாகத் திருமணத்திற்கு வந்திருந்த பட்டுவேட்டிகள்-உத்தரீயங்கள்- பட்டுப் புடவைகள் – கனசாம்பரத் தலைகள் – நெக்லஸ் கழுத்துகள்-சென்ற் வாசனைகள் எல்லாமே வெளியில் வந்து வானத்தைப் பார்வையிட்டபடி நின்றன. ஹெலிகொப்ரர் வட்டத்தில் ஒவ்வொரு தடவை சமீபமாக வந்து வந்து சென்றது. 'சுட்டது' என்பதைவிட 'குண்டு மழை பொழிந்தது' என்பதுதான் பொருத்தமானது.

'என்ன நடக்குது எண்டுதெரியவில்லையே?' என்ருர் பரமானந்தக் கிழவர்.

'பெடியள் கீழேயிருந்தும் அடிக்கிருன்கள்!,

'அதுதான் 'ஹெலி' உயரத்துக்கு எழும்பி விட்டுது...'

'என்னவோ பேச்சு வார்த்தை - எண்டான்களே?'

'அப்பிடிச் சொல்லிச் சொல்லித்தான் பேய்க்காட்டுருன்கள்...!,— இப்படி அவரவர் அபிப்பிராயங்கள்.

'கொஞ்சம் மரமறைவிலை, வீட்டு மறைவிலை நிண்டு பாருங்கோ! சனக் கூட்டத்தைக் கண்டுவிட்டு இஞ்சையும் சுடப்போருன்!' என்றது ஒரு முன் ஜாக்கிரதைக் குரல்.

'ஆராவது சைக்கிளை எடுத்துக் கொண்டு அந்தப் பக்கமாய்ப் போய் என்னெண்டு பார்த்துக் கொண்டு வாங்கோவன்,' என்ருர் பரமானந்தம்.

'பாட்டாவுக்கு வேறை வேலையில்லை; எங்களையும் போய்ச் சாகச் சொல்லுறியளே? வேணுமெண்டால், சைக்கிள் தாறன்; நீங்கள் போய்ப் பாருங்கோ!'

சிவப்பிரகாசத்தின் நையாண்டியைக் கேட்டுத் திரும்பிய பரமானந்தம், 'இதுவும் ஒரு ஜன்மம்!' என்றமாதிரி அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டார்.

நின்ற மற்றவர்களும் சிரிப்பும், கேலியுமாக மெள்ளக் கலந்து அவரவர் அலுவல்களைக் கவனிக்கப் போனுர்கள், 'இது வழக்கமான சங்கதி தானே!' என்று அவருக்குச் சொல்பவர்களைப் போல.

நின்றிருந்த ஒலிபரப்பிகளின் 'அசுரத்தொனி'யும் ஒவ்வொன்ருக ஆரம்பித்து 'வெடிமுழக்கங்களை, மறைத்தது. வெடிமுழக்கங்களும் உண்மையாகவே குறைந்து விட்டதைப் போல் தோன்றிற்று.

பரமானந்தம் கிட்டத்தட்ட தனித்து விடப்பட்டவர் போல் நின்ருர். சிவப்பிரகாசத்தின் மனுேநிலை அவரை என்னவோ செய்தது. அவன் எப்பவுமே அரசியலில் ஈடுபாடில்லாதவன் தான்! அவனுக்கு அவனது வியாபாரம்–பணம் -ஈடு-கடன்-வட்டி-வட்டியைத் தராதோர் மீது வழக்கு - கோடு - புரொக்ரர் - அவ்வளவும்தான் விஷயங்கள். அரசியலாவது, சுதந்திரமாவது. போராட்டமாவது-மண்ணுங்கட்டி!

அத்துடன் சில மாதங்களுக்கு முன்னுல் போராளிகளின் இரகசியங்களை எதிரிக்குக் காட்டிக் கொடுத்ததாக ஒருவர் விடுதலை இயக்க மரண தண்டனைக்கு உள்ளானுர். அந்தப் பேர்வழி சிவப்பிரகாசத்தின் அருமை நண்பர். அதன் பின் போராளிகள் என்ருலே கோபம் வந்து விடும் சிவப்பிரகாசத்துக்கு.

எத்தனை முறை நிதி-உதவி வேண்டி வந்தவர்களை ஏசிப் பேசி விரட்டியிருக்கிருன்?

சற்றுத் தூரத்திலிருந்த பிரதான வீதிக்கு மெள்ள மெள்ள வந்து சேர்ந்தார் பரமானந்தம்.- சைக்கிளோ - பஸ்ஸோ - மினிபஸ்ஸோ நகர்ப் புறத்திலிருந்து வந்தால் ஏதும் தகவல் பெற்றுக் கொள்ளலாம்!

ஆனுல் ஏதும் அந்தப் பக்கத்திலிருந்து வெகு நேரமாகியும் வரவில்லை-அவ்வளவு கலவரத்தில் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டிருக்கலாம். பெருமூச்சொன்றினுல் மனச்சுமையைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டவராக வீடு திரும்பினுர் பரமானந்தம்.

'ரவுணிலை என்னவோ பிரச்சினையாக்கும்' என்ற சர்வசாதாரணமான தீர்மானத்தின் மீது சல்யாண வீடு மீண்டும் 'களை' கட்டியிருந்தது. ஆனுல் மணமக்கள்—கூறை - தாலி - மேளம் நாதஸ்வரம்-போட்டோ -அதெல்லாம் போய், குடும்ப சமேதராகச் சமூகமளித்து மணமக்களை ஆசீர்வதித்தவர்கள் இப்போது சாம்பார் - அப்பளம் - வடை - பாயாசம் பிரச்சினையிலீடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

கிழவரைக் கண்டதும் சிவப்பிரகாசம் பக்கத்திலிருந்தவரிடம் ஏதோ சொல்ல இருவரும் சிரித்துக் கொண்டார்கள். அதை அவதானித்தும், அவதானிக்காதவர் போல் அசன்ற பெரியவர், உள்ளே போய், ''மோனை! றேடியோவைப் போடன்! நியூஸ்"க்கு நேரமாச்சு. ஏதும் சொல்லுருனே பாப்பம்'' என்ருர் திருமதி சிவப்பிரகாசத்திடம். அவள் சாம்பார் கரண்டியுடன் முறைத்துக்கொண்டே திரும்பிப் பார்த்த பார்வையில், மறுவார்த்தை பேசாமல் திரும்பி வந்துவிட்டார்.

- அவன் எட்டடி பாய்ந்தால், இவள் பதினுறடி பாய்வாள் போலிருக்கிறது!-

(2) ★

**நே**ற்று நூற்றுக்கும் அதிகமான இராணுவத்தினர் நாவற்கேணிக் கிராமத்தில் தேடுதல் வேட்டைக்காக வந்து கொண்டிருந்தபோது, மதவடித் திருப்பதில் கண்ணிவெடியில் சிக்கி ஒரு கவசவாகனம் சிதறியது. பதினெரு இராணுவத்தினர் அந்த இடத்திலேயே உடனே பலியானுர்கள். கூட வந்த மற்ற இராணுவத்தினர் சுட்டதிலும், பின் அவ்விடத்திற்கு வந்த 'ஹெலிகப்ரர்' தாக்கியதிலும் பதினுறுக்கும் அதிகமான

சஞ்சீவி சிறுகதை

பொதுமக்கள் உயிரிழந்தார்கள். 25க்கு மேற்பட்டவர்கள், குழந்தைகள், பெண்கள் உட்பட-படுகாயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பல பல கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன. போராளிகளின் பதில் தாக்குதலினுல் 'ஹெலி' உயர எழுந்து திரும்பிச் சென்றுவிட்டதுடன் இராணுவத்தினரும் பின் வாங்கிச் சென்றனர். இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதம் பற்றிய முழுவிபரமும் இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை கிடைக்கவில்லை. முகாமுக்குத் திரும்பிய இராணுவம் அங்கிருந்து

- செ. சி. பரமேஸ்வரசர்மா -

'ஷெல்' தாக்குதலை மேற்கொண்டது. போராளிகள் தரப்பில் இருவர் வீர மரணமடைந்தனர். இருவர் சிறு காயங்களுக்குள்ளானுர்கள்'

— அதிகாலையில் யாழ்ப்பாணத்துத் தமிழ்த் தினசரியொன்று முதற்பக்கத்தில் இந்த நேற்றைய செய்தியைத் தாங்கி வெளிவந்தது.

வீட்டில் எல்லாருக்கும் நேற்றைய கல்யாணக் களைப்பு. எல்லாரிடத்திலும் அலுப்பும், தயக்கமும்.

ஆனுலும் நேற்றுப் போல இல்லாமல் எல்லாரும்— சிவப்பிரகாசத்தைத் தவிர — இந்தச் செய்தியின் மகிழ்விலும், சோகத்திலும் அக்கறையுடன் பங்குபற்றி விசாரித்து, விமர்சித்து, அனுதாபத்தையோ மகிழ்ச்சியையோ தெரிவித்து இப்படியெல்லாம் செய்து கொண்டார்கள்.

''அது தான் நேற்று ஒருக்கால் போய்ப் பாத்துக் கொண்டு வாருங்கோ என்று நான் சொல்லச் சொல்ல அதுக்குக் கூட மனம் வராமல் மாடுகள் போல நிண்டியள். நேத்து இவ்வளவு கிட்ட நடந்த சங்கதியளை இண்டைக்குப் பேப்பரிலை பாத்துத்தான் அறியலாமெண்ட அளவுக்கு நாங்கள் மரங்களிலும் கேடுகெட்டவர்களாக இருக்கிறம்...'' என்று பரமானந்தர் சொன்னபோது எல்லோரும் மௌனம் சாதித்தார்கள்.

நேற்றுச் சிவப்பிரகாசம் போன்றவர்களின் முறை; இன்றைக்குப் பரமானந்தர் போன்றவர்களின் முறை.

''எங்களைப் போலை அந்தப் பெடியளுக்கும், தங்கடை தங்கடை பாட்டைப் பாத்துக் கொண்டு வீட்டிலை கிடக்கத் தெரியாதா? சாவுக்குப்பயப்பிடாமல் அவன்கள் நின்று தடுத்திராவிட்டால் அவ்வளவு பேரும் ஊருக்குள்ளை வந்திருப்பான்கள். எங்களிலை எத்தினை பேர் சுடுபட்டுச் செத்திருப்பம்? எத்தனையோ பேரைப் பிடிச்சுக் கொண்டு போயிருப்பான்கள்? எத்தனை வீடுகளைக் கொளுத்தியிருப்பான்கள்? கலியாண விடுகள் செத்த வீடுகளாய்ப் போயிராதா? ஊரே சுடலையாயிராதா?......''

மற்றவர்களல்ல, நேற்று நையாண்டி பண்ணிய சிவப்பிரகாசமும், எரிந்து விழுந்த திருமதி சிவப்பிரகாசமும் கூட எதிர்ப் பேச்சுப் பேசாமலிருந்தது ஆச்சரியப்படக் கூடியதாக இருந்தது.

'அவர் சொல்வதெல்லாம் சரிதான்!' என்று எல்லோருடைய முகங்களிலும் 'எழுதி ஒட்டி' யிருந்தது.

''சும்மா சொல்லப்படாது. அந்த நாளையிலையே அவர் அரசியலிலை பெரும் அக்கறை கொண்டிருந்தவர். முற்ற வெளியிலை கூட்டமென்ருல் தவறவிடார். கோல்பேஸ் சத்தியாக்கிரஹம், குண்டர்கள் கல்லெறி, - பொலீஸ் தடியடி, ஸ்ரீ எதிர்ப்பு, உண்ணுவிரதம், எல்லாத்திலையும் பங்கு கொண்டவர்...'' என்று ஒருவர் விளக்கமளிக்க ஆரம்பித்து விட்டார்.

''அப்பிடியா? அப்பிடியெண்டால் பெரிய அரசியல்வாதியெண்டு சொல்லுங்கோ!''

''அப்பிடியொண்டுமில்லை. பாவம், அவர் ஒரு கிராமசபை மெம்பராக வரக்கூட நினைச்சவரல்ல; அவர் ஒரு சிறு தொண்டர் மட்டுந்தான்''

'சிறுதொண்டர்என்று ஒரு'அறிஞர்' சொல்லச், சிலர் புன்னகை பூக்க விஷயம் முடிந்தது.

நினைவூட்டப்பட்ட பழைய விஷயங்களை எல்லாம் மீண்டும் நினைவுபடுத்திக் கொண்டார் பரமானந்தம்.- உண்மைதான்! எந்த விதமான சுயநலன்களும் இல்லாத அரசியலீடுபாடு அது! - பணம், பெயர்- - புகழ் - பட்டம்-பதவி ஊஹும்! ஒன்றுமே கிடையாது. அந்த நேரத்து அரசியல் நிலைமை ஏற்படுத்திவிட்ட உணர்ச்சி வேகம் அது. அதில் பாதியளாவது இவர்களுக்கு இருந்தால், இவ்வளவு சமீபத்தில் இவர்களைக் காப்பாற்ற, வாழவேண்டிய இளம் பிள்ளைகள் உயிரைப் பணயம் வைத்துப் போராட, அப்பாவிகள் அநியாயச் சாவு சாக, இவர்கள் இங்கே பாட்டும், கூத்தும், கொண்டாட்டமும், வகைவகையான சாப்பாடுமாக 'நமக்கென்ன?' என்றமாதிரி இருந்திருப்பான்களா? இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்குப் பின்பு பத்திரிகையைப்பார்த்து விட்டல்லவா 'விளாசு'கிருர்கள்!

'நான் மட்டும் என்ன? ... போல் ஏதும் செய்யக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முட்டாளுக்குப் புத்தி சொன்னுல்?

**ஒரு** காட்டில் பல குரங்குகள் கூட்டமாக வசித்து வந்தன.

குளிர்காலத்தில் ஒரு நாள் மிகவும் கடுமையான குளிராக இருந்தது. குரங்குகளால் குளிரைத் தாங்க முடியவில்லை.

கொஞ்சம் நெருப்புக் கிடைத்தால் சருகுகளைப் போட்டு தீ மூட்டி குளிர் காயலாம் என்று கிழக் குரங்கு கூறிற்று.

நெருப்புக்கு எங்கே போவது என்று குரங்குகள் யோசித்துக் கொண்டிருந்தபோது ஒரு மின்மினிப் பூச்சி 'பளிச் பளிச்' சென்று மின்னியவாறு பறந்து பறந்து சென்று கொண்டிருந்தது.

அதைக் கண்ட ஒரு குரங்கு 'அதோ நெருப்பு போகிறது' என்று கூறிற்று.

மற்ருெரு குரங்கு அந்த மின்மினிப் பூச்சியைப் பிடித்து வந்து தரையில் போட்டது.

மற்றக் குரங்குகள் சுற்றிலும் கிடந்த குப்பை கூளங்களைச் சேகரித்து வந்து மின்மினிப் பூச்சி மீது போட்டன.

பிறகு குரங்குகள் நெருப்பு கொழுந்து விட்டு எரியப் போகிறது என எதிர் பார்த்துச் சூழ்ந்து அமர்ந்து கொண்டன.

ஆனுல் தீ எரியும் வழியைக் காணும்.

பிறகு குரங்குகள் வாயினுல் குப்பையை ஊதி நெருப்பை எரியவிடும் முயற்சியில் ஈடுபட்டன.

மரத்தில் அமர்ந்து குரங்குகளின் கோமாளித் தனத்தைக் கவனித்துக் கொண்டிருந்த சுசிமுகி என்ற ஒரு பறவை கலகலவென்று சிரித்தவாறு மரத்தை விட்டிறங்கிக் கீழே வந்து அமர்ந்தது.

பிறகு குரங்குகளை நோக்கி 'நண்பர்களே! மின்மினிப் பூச்சியை நெருப்பு என்று எண்ணிக் கொண்டு தீ மூட்ட வீண் பிரயாசை எடுக்கிறீர்கள். நீங்கள் என்ன தான் வாயால் ஊதினுலும் மின்மினிப் பூச்சியிடமிருந்து நெருப்பு வரவே வராது. வீண் வேலையை விட்டு விடுங்கள்' என்று புத்திமதி கூறிற்று.

'உனக்கு ஒன்றும் தெரியாது. வாயை மூடிக் கொண்டு உன் வேலையைப் பார்' என்று கூறிவிட்டு, குரங்குகள் மறுபடியும் குப்பையை ஊதி தீ மூட்ட முயற்சி செய்தன.

பறவை குரங்குகளின் முட்டாள் தனத்தை எண்ணித் திரும்பத் திரும்ப புத்திமதி கூறிக் கொண்டிருந்தது.

இதனுல் கோபமுற்ற குரங்குகள் எல்லாம் சேர்ந்து சுசிமுகி மீது பாய்ந்து அதனைப் பிடித்துத் தரையில் அடித்துக் கொன்று விட்டன. ★

## விடுகதைகள்

1. சின்னச் சின்ன ராஜாவுக்கு சிங்கார மாளிகை; சின்ன ராஜா எங்குசென்ருலும்கூடவே செல்லும் மாளிகை! — அது என்ன?

2. தட்டினுல் சிருதவன் முட்டினுல்சிறுவான் அவன் யார்?

3. காலில்லாத பந்தலாம், காணக் காண விந்தையாம்! அது என்ன?

4. கால் கறுப்பு, முக்கால் சிவப்பு, உடைத்தால் பருப்பு, தின்ருல் துவர்ப்பு — அது என்ன?

### விடைகள்

1. நத்தை
2. தீக்குச்சி
3. ஆகாயம்
4. குன்றுமணி

**தொகுப்பு: சி. ஸ்ரீகரன்**
சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம், வேலணை.

## முயன்று பாருங்கள்




**இடமிருந்து வலம்**

1. யாரிடமும் சொல்லக் கூடாதது.
5. முட்டையின் உள்ளே இருப்பது.
6. நல்ல நேரம்.
7. அண்ணுவுக்குப் பின்னே பிறந்தவன்.
9. ஓர் எழுத்துச் சேர்ந்தால் உண்ணுவது.
10. பாரி ஆட்சி செய்த மலை இது.
12. தலையெழுத்தை இப்படிக் கூறுவர்.

**மேலிருந்து கீழ்**

1. இது இல்லாதவர்கள் இருக்க முடியாது. 'டிக் டிக்' என்று அடித்துக் கொண்டே இருக்கும்.
2. விதம்.
3. குழந்தையை இப்படியும் அழைப்பர்.
4. ஓரிடத்திலிருந்து இன்னேரிடத்துக்குப் போவதை இப்படிச் சொல்வர்.
8. நாம் மீண்டும் மீண்டும் இதனை எடுத்துக் கொண்டே இருப்போம்.
9. சாப்பாட்டுக்கு இது மிகவும் பிரதானம். இது இல்லாமல் ருசி இருக்காது.
11. கடவுளை இப்படியும் சொல்வர்.




### கண்டுபிடிப்பு - கண்டுபிடிப்பாளர்கள்

| | |
|---|---|
| குருதிச் சுற்ருேட்டம் | - வில்லியம் ஹார்வே |
| நோய் தடுப்பு ஊசி மருந்து | - எட்வேட்ஜெனர் |
| கொலரா | - லூயிபாஸ்ரர் |
| ஏர்ப்புக்க் குக்கல் | - அடொல்வென்பெரிக் |
| உயிர்ச்சத்துக்கள் | - கிரிஸ்டின் அயிக்டன் |
| பென்சிலன் | -அலெக்சாண்டர்பிலெமின் |
| இளம்பிள்ளைவாத தடுப்புமருந்து | - ஜோனஸ்போல்க் |
| எக்ஸ்றே | - வில்ஹெல்ம்ரென்ட்வின் |
| அறுவைச்சிகிச்சை | - ஹிப்போகிரிடன் |
| இருதய மாற்றுச்சிகிச்சை | - கிறிஸ்டியன்பர்ஞட் |

தெ. ரதீஸ்வரன்
புலிதசார்ல்ஸ் மகாவித்தியாலயம்
யாழ்ப்பாணம்.

# பிரசவம் கண்ட தாய்மார்கள் பேண வேண்டிய வழிமுறைகள்

**கு**ழந்தை பிறந்து மருத்துவ மனையைவிட்டு வீட்டிற்கு வந்தவுடன் தாய்க்கும், குழந்தைக்கும் மறைவான ஓர் அறையில் இடம் ஒதுக்க வேண்டும்.

வெளியே இருந்து வரும் நண்பர்கள், கணவன், உறவினர் யாராக இருந்தாலும் கை, கால்களைக் கழுவிக்கொள்ளாமல் குழந்தையின் அருகில் வரவே கூடாது.

தாய்க்கு நல்ல ஓய்வும், தூக்கமும் தேவை. பிரசவ வேதனைப்பட்டு நரம்புகள் யாவும் தளர்ந்துபோய் பலவீனமாக இருக்கும் அப்பெண்ணின் அருகில் அமர்ந்து 'தொண தொண' வென்று பேசுவது மிகத் தவறு,

தாயின் உணவு விஷயத்தில் புகுந்த வீட்டினராக இருந்தாலும்சரி, பிறந்த வீட்டினராக இருந்தாலும்சரி 'போஷாக்கு மிகுந்த உணவை' அளிப்பதற்கு தயங்கக்கூடாது.

எக்காரணம் கொண்டும் தாயின் மனம் பாதிக்கும்படியான செய்திகள், சொற்கள் இவற்றைக் கூறவே கூடாது, எந்தவித அதிர்ச்சி தரும் காட்சியைப் பார்க்க நேரிட்டாலும், தாயின் மனநிலை பாதிக்கப்படுவது உறுதி.




பிரசவித்த பெண்கள் தங்களைக் காத்துக் கொள்ள சிலவிதிமுறைகளைப் பார்ப்போம்:-

நீங்கள் குழந்தையை எதிர் பார்க்கும்போதே மனதுக்குள் 'இக்குழந்தையின் வளர்ச்சிக்காக நான் சலிக்காமல் பாடுபடுவேன் என உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்.

பிரசவித்த பெண்களின் வயிறு தனியாகத் தொங்குவதுபோல இருக்கும். நீங்கள் மிக மெல்லிய பருத்தித்துணியைப் பட்டையாக மடித்து வயிற்றையும், இடுப்பையும் சுற்றிக் கட்டி முடிச்சிட வேண்டும். இம்முறையால் வயிறு, இடுப்பு இவை பருமனுகாமல் தடுக்கலாம்.

வயிற்றுப்பகுதி கறுத்தும், சுருங்கியும் இருக்கும். இதற்கு எண்ணெயில் மஞ்சள் பொடியைக் குழைத்து தடவிகுளித்து வரவேண்டும்.

கண்களுக்கு அதிக வேலைகொடுத்து படிப்பதோ எழுதுவதோ கூடாது. தனியாக அமர்ந்து உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டவேண்டும். தாய்ப்பால் ஊட்டும்போது மனமகிழ்ச்சியுடனும் அன்புடனும் குழந்தையை அணைத்துக்கொண்டு பாலூட்டவேண்டும்.

பால், காய்கறிகள், பழங்கள் இவற்றை நிறைய சாப்பிடவேண்டும்.எக்காரணம்கொண்டும் கோபப்படக் கூடாது,

கணவன் வீட்டிலேயே பிரசவம் நிகழ்ந்திருந்தால், தயக்கமின்றி பால், மற்ற உணவுகளைக் கேட்டு வாங்கிச் சாப்பிடவேண்டும்.

நீங்கள் நல்ல மனநிலையுடனும், உடல் நிலையுடனும் இருந்தால்தான் உங்கள் குழந்தை ஆரோக்கியமாக வளர முடியும்.

குழந்தை உறங்கும் போது நீங்களும் தூங்கி நன்கு ஓய்வெடுக்கவேண்டும். ★

- அமிர்தா சுப்பிரமணியம் -

நன்றி: சுமங்கலி

## சமையல் குறிப்பு

### கீரைக்குழம்பு

**தேவையான பொருள்கள்:**

முளைக்கீரை அல்லது, சிறுகீரை அல்லது, மணத்தக்காளிக்கீரை அல்லது பருப்புக்கீரை 2கட்டு,
தக்காளிப்பழம் ஒன்று (பெரியது)
பச்சை மிளகாய் 4
பருப்பு ஒரு மேசைக்கரண்டி
வெங்காயம் ஒன்று (பெரியது),
தேவையான உப்பு, மஞ்சள்பொடி
புளி ஒரு நெல்லிக்காயளவு'
மிளகாய்த் தூள்1 மேசைக்கரண்டி,
தேங்காய் எண்ணெய்அல்லது நல்லெண்ணெய்

**தயாரிக்கும் முறை:**

கீரையை ஆய்ந்து சுத்தப்படுத்திப் பொடியாக நறுக்கவும். தக்காளியை வெந்நீரில் போட்டுத் தோலெடுத்து சிறிய துண்டுகள் செய்யவும். புளியை ஒரு கிளாஸ் நீரில் ஊறவைக்கவும். கற்சட்டியில் அரைக் கிளாஸ் நீர் விட்டுக் கொதிக்க வைக்கவும். அதில் கீரை, உப்பு, மஞ்சள்பொடி ஆகியவற்றைப் போட்டு வெந்த பிறகு மிளகாய்த்தூள், தக்காளிப் பழம், பச்சைமிளகாய் இவற்றைப்போட்டு, புளியை கரைத்து விடவும். சற்று கொதிக்க விடவும். பின் வெந்த பருப்பைப் போட்டு சேர்த்துக் கொதித்தவுடன் தயிலிருந்து இறக்கி விடவும். பிறகு எண்ணெயில் ..டு கடுகு, உளுத்தம் பருப்பு தாளித்துக் கொட்டவும்.

எஸ். கேதீஸ்வரி

## சஞ்சீவி கவிதைக் கதம்பம்

## போராளி மண்டேலா

**ம**னிதனைப் படைத்தவன் ப்ரொமிதெயுஸ். உயிர் தந்தவர் செயுஸ். (கிரேக்க கடவுளர்களுள் பெரியவர் - வலியவர் - செயுஸ்) ஆதி மனிதன் பண்படாதவனாக, நாகரிகமற்றவனாக இருந்தான். அவன் அப்படி இருப்பதையே செயுஸ் விரும்பினார்.

ஆனால் ப்ரொமிதெயுஸோ மனிதனை நேசித்தான். தேவர்களிடமிருந்து தீயைக் களவெடுத்து மனிதனுக்குக் கொடுத்தான் அவன். அது தவிர மட்பாண்டங்கள் வனையவும், அணிகலன்கள் செய்யவும், உலோகத்தால் ஆயுதங்கள் செய்யவும் மனிதனுக்குக் கற்பித்தான்.

இவற்றையெல்லாம் அறிந்த செயுஸ் கோபங்கொண்டார். 'நெருப்பின் ரகஸியம் மனிதனுக்குத் தெரியக்கூடாது என்பது என் சட்டமையன்றோ! உன் ஆதரவால் மனிதன் தேவனாகி - கடவுளர்களுக்குச் சவால்விடும் நிலைக்கு உயர்ந்து விட்டானே!' என்று சீறினார். ப்ரொமிதெயுஸ் கைது செய்யப்பட்டான்.

கார்கேசிய மலைத்தொடரில் யாரும் அணுகாத ஒரு குன்றோடு சங்கிலியாற் பிணைக்கப்பட்டான் ப்ரொமிதெயுஸ். ஒவ்வொரு நாளும் ஒரு கழுகு அவனைக் கொத்திக் குதறி ஈரலை உண்ணும். இரவில் ஈரல் திரும்ப வளரும். மறுநாள் கழுகு வரும்; மீண்டும் சித்திரவதை தொடரும்—இது கிரேக்க புராணக் கதை.

நிறவெறிக்கெதிராகப் போராடும் நெல்ஸன் மண்டேலாவை தென் ஆபிரிக்கக் கவி டேவிட் இவான்ஸ் ப்ரொமிதெயுஸ் ஆகக் காண்கிறார். தென் ஆபிரிக்க அரசால், 25 ஆண்டுகளாக சிறை வைக்கப்பட்டிருக்கும் மண்டேலாவின் நெஞ்சுறுதி குலையவே இல்லை.

செயுஸ் (போதா?) ஹேமீஸ் என்ற தூதனை அனுப்புகிறார் — ஆசை காட்டி ஒப்புதல் வாக்குமூலம் பெற! மண்டேலா மசியவே இல்லை. மது, மாது என்ற கவர்ச்சிகளாலும் அவரைப் பணிய வைக்க முடியவில்லை. கறுப்பின மக்களின் விமோசனத்துக்காக அவர் சிறைவாசம் அனுபவிக்கிறார். -அவருடைய பிறந்த தினம் இன்று.

✱

விண்ண ளாவிய மலையின் முகட்டிலே
விலங்கிடப்பட்ட வீரன் ப்ரொமிதெயுஸ்!
கண்ணிலுலதைப் பார்க்கவொண்ணு தவன்
கையெலாம்வலி; முதுகெலாம் வெட்டுண்ட
புண்கள் ஊடு குருதி பொழியும்; அப்
பொழுது கன்றிய முகத்துக் கெதிரிலே
கண்கள் கூசும், கடவுள் செயுஸ் ஒளி
காலும் டோர்ச்சைப் பிடிக்கும் பொழுதிலே'

பொழுது பட்டதும் அச்சம்; பசியொடு
புரட்டிக் கொத்திக் குதறி எறிந்திட
கழுகுகள்வரும், சொண்டு நகங்களால்
கவடு மார்பெலாம் ஆயும்; சடங்குகள்
முழுதும் மீளத் தொடங்கும்; இவ்வேதனை
முடியக்கூடும் சா வொன்றினல் என்னிலோ
எழுதி வைத்துளான் 'அமரன் இவன்' என
இறைவன் பின்னர் ஈடேறுவ தெங்ஙனம்?

குறையு டைஅணி கோதையர் கொங்கைகள்
குத்தும் வந்திவன் மார்பைத்தொடைகளோ
படைநடத்தும்; செவியிற் சிணுங்கல்கள்
பலவு ரைக்கும்; இன்பங்கள் உலகிலே
நிறைய வைத்துளான் ஆண்டவன்-அனுபவி
நிறுத்து போரை! நம் ஆட்சி அமைப்பு நன்
முறையென் றேற்றோர் ஒப்ப மிடுகநீ
முன்னர் செய்த பிழையைப் பொறுக்கலாம்!

''நெருப்பு மானிட வர்க்குப் பயன்பட
நீ முனைந்தொரு சூழ்ச்சி புரிந்தனை;
திருப்பி மக்களைத் தேவர்மேல் ஏவிநான்
செய்த வையகம் முற்றும்நீ ருக்கினை;
(சுருட்டுச் சாம்பலைத் தட்டிஅன் பொழுகவே
சொல்லுவார் செயுஸ்)எல்லாம் பொறுக்குமென்
அருட்டிறம்! நாம் அனைத்தும் மறப்பம், வா
ஐய! 'செய்தது பிழை'-ஒப்புக் கொண்டிடு!'

மெல்லடி நோவ பிறவுண்சுவேட் அணிந்து
ஹேமிஸ் ஓர் மெஸேஜ்உடன் வந்தான்
''சொல்லொரு சொல்லை! கையெழுத்திடினித்
துன்பமெ லாம்தொலைந் திடும்நீ
செல்லுதற் குரிய கடவுச்சீட் டிந்தா!
செய்தது பிழையென ஒப்புக் -
கொள்ளுதி நண்பா! முன்புநாம் கூடிக்
குடித்தநாள் - களித்தநாள் நினைப்பாய்!''

விலங்குபூட் டுண்டு மலையொடு கிடந்த
வீரன்வே தனையினுல் நெளிந்தான்!
வழிந்திடு குருதி வாயினுல் 'தூ' வென்
றிசழ்ந்(து) 'ஒரு போதும்நான் மாட்டேன்;
ஒழிந்து போ!' என்றே உறுமினன்; தோல்வி
உற்றசன் றனன்செயுஸ்! உடலம் -
கிழிந்திட, மீண்டும் கழுகுகள் கொத்தக்
கிடந்தனன் உலகெலாம் வணங்க!

தந்திகள் அணுகாத் தொலைவில்ஹெ ராக்ளிஸ்
தானுள(து); அமைதி - பேரமைதி -
அங்குகோ லோச்சும்! சட்புல னுகா
மானிடர் அறிதுயில் கொள்வார்!
இங்கொரு சிற்றூர்க் குடிசையில் நெருப்புக்
கனன்(று) எழுந் தடங்கிய(து)! அதனைத்
தந்தவன் ப்ரொமிதெயுஸ் கொடுந்துன்பம்
சகிக்கிறன் மானிடர் வாழ!

**ஆங்கில மூலம்: டேவிட் இவான்ஸ்**
**தமிழில்: சோ. பத்மநாதன்**

சிறையில் நீண்டகாலம் வாடும் கறுப்பினத் தலைவர் மண்டேலாவின் 69-ஆவது பிறந்தினம் இன்று. இதனையொட்டி இச் சிறப்புக் கவிதை பிரசுரமாகிறது.

---

# பெற்றோர்கள் முன்மாதிரியாக வாழ வேண்டும் ஆனால் அவர்கள் "ஒரு மாதிரி" வாழக்கூடாது

**கு**ழந்தைகள் பார்த்துப் பின்பற்றுவதற்காக மாதிரி மனிதர்களே தேவை; குறை கூறுபவர்களல்ல! என்கிறார் ஜோசப் ஜோபர்ட்.

இன்று நம்மைச் சுற்றிலும் காணப்படும் குழந்தைகள் நம்மைப் பார்த்துப் பின்பற்றத்தக்கதான மாதிரி மனிதர்களாக நாம் வாழ்கின்றோமா?

பெற்றோராகிய நமது பழக்க வழக்கங்கள் எப்படி இருக்கின்றன?

குழந்தை முதன் முதல் உற்றுப்பார்த்து கற்றுக்கொள்ளும் முதல் பாடப் புத்தகம் நீங்கள்தான் என்பதை மறந்துவிடாதீர்கள்.

நமது ஒவ்வொரு பார்வையும், சொல்லும் செயலும் பிஞ்சு உள்ளங்களில் தஞ்சம் புகுந்து, நீங்காத சித்திரம் ஒன்றை வரைந்து விடுகிறது என்பதை நாம் சிறிதும் எண்ணிப் பார்ப்பதில்லை.

மாசுமருவற்ற மணமுள்ள மலரைப்போன்ற மக்களை உங்களது மடியில் அளித்திருக்கிறார் இறைவன். கடந்த காலம் எதிர்காலம் எதையுமே அறியாத— புரியாத இக்குழந்தைகள் நிகழ்காலத்தை மாத்திரமே நினைத்து வாழ்கின்றார்கள்.

ஏனென்றால், அவர்களது எதிர்காலம் உங்கள் கையில் அல்லவா இருக்கிறது! குழந்தையின் விருப்பு வெறுப்புகளை அறிந்து மதித்து நடத்துங்கள். குழந்தை உங்களை மாத்திரமல்ல; மற்றவர்களையும் மதிக்கக் கற்றுக்கொள்ளும். மதிப்பவர்களே மதிப்பிற்குரியவர்களாகின்றார்கள்.

### கீழ்ப்படிதல்

நீங்கள் உங்களது குழந்தைக்குக் கற்றுக்கொடுக்க வேண்டிய முதல் பாடம், ''கீழ்ப்படிதல்'' வெற்றியின் ஒவ்வொரு வாசலையும் திறக்கும் திறவுகோல் கீழ்ப்படிதலே; கீழ்ப்படியாதவன் வாழ்வு, போராட்டத்திலே அஸ்தமித்துப் போய்விடும்.

குழந்தை வைத்தது தான் சட்டம் என்ற காரியம் அநேக வீடுகளில் அமுலில் இருக்கின்றது. அதிலும் அநேக ஆண்டுகள் பிள்ளையின்றித் தவித்த பெற்றோர்களுக்கு குழந்தை பிறந்து விட்டாலோ, அல்லது அநேக பெண் குழந்தைகளுக்குப் பின்னர் கறிவேப்பிலைக் கன்றுபோல் ஒரே பையன் பிறந்து விட்டாலோ கேட்கவே வேண்டாம்!

சில பெற்றோர்கள் 'சின்னப் பிள்ளைதானே! போகப்போக எல்லாம் சரியாகிவிடும்' என்று கண்டிக்காமல் விட்டு விடுகிறார்கள். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்பது நாம் அறிந்ததே. எனவே பிள்ளைகளைத் தட்டிக் கொட்டி முட்டி மோதி அவ்வப்போது அறிவுரை கூறிப் பக்குவமாய் வளர்க்க வேண்டும்.

**- கமலா -**

### அன்பு

சில வீடுகளில் தகப்பனார் நுழைந்தவுடன் பிள்ளைகள் பெட்டிப் பாம்பாய் நடுங்கி ஒடுங்கிப் பதுங்கியிருக்கின்றனர். பயம் படுத்தும் பாட்டை பல வீடுகளில் நாம் காண்கிறோம். இத்தகைய நிலை பின்னுள காலத்தில் குழந்தைகளை வெகுவாகப் பாதிக்கின்றது. எனவே பயத்திற்கு பதிலாக உங்களது வீட்டில் அன்பு ஆட்சி செலுத்தட்டும்.

### தண்டனை

பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறன் என்று திருமறை கூறுகின்றது. இதைக்குறித்துப் பல்வேறு கருத்துக்கள் நிலவி வந்தபோதிலும் ஒன்றை நான் வற்புறுத்திக் கூற விரும்புகின்றேன். தண்டனை கண்டிப்பாக அவசியம். தவறுக்கேற்ப சிறுதண்டனைகளை அவ்வப்போது கொடுத்து பிள்ளைகளைத் திருத்தவேண்டும்.

பையன் கண்ணீர் சிந்துவதைக் காண முடியாவிட்டால், காலமெல்லாம் நீங்கள் கண்ணீர் சிந்தவேண்டியதாயிருக்கும் என்பதை நினைவில்கொள்ளுங்கள் பிள்ளைகளுக்கு மிதமிஞ்சி சுதந்திரம் கொடுத்து கெடுத்துப் போடாதீர்கள். உடல் நலமும் சக்தியும் அளிக்கத்தக்கதான வீட்டுவேலைகளில் அவர்களை ஈடுபடுத்துங்கள். பாகுபாடின்றி எந்த வேலையையும் செய்யத் தக்கதாக அவர்களைப் பழக்குங்கள்.

உங்கள் குழந்தைகளிடம் பொறுமையோடு செயல்படுங்கள். அளவற்ற அன்பு பாராட்டுங்கள். கனிவோடு உங்கள் பக்கமாக இழுத்துக் கொள்ளுங்கள். சாந்தத்தோடு விளுவி காரியங்களை மெல்ல மெல்ல தெளிவு படுத்துங்கள், தன்னடக்கத்தை இளம் பிராயத்திலேயே பயிற்சிக்குக் கொண்டுவர முயலுங்கள். நீங்கள் பல முறை தோற்றுப்போகலாம். எனினும் பின்னர் நிச்சயமாகப் பலனைப் பெறுவீர்கள்.

குழந்தைகளிடம் தன்னலம் தலைதூக்காமலிருக்க அவர்கள் தங்களதுபொம்மைகள், தின்பண்டங்கள் போன்றவைகளை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளச் செய்யுங்கள். உங்களிடமும், வீட்டுக்கு வரும் விருந்தினர்களிடமும் ஏற்றத்தாழ்வின்றி மரியாதையோடும் அன்புடனும் நடந்துகொள்ள கற்றுக்கொடுங்கள்.

சிலர் தங்களது குழந்தைகள் தவறு செய்யும் போதுமிருகங்களை அடிப்பதுபோன்று அடித்துத் தங்களது கோபத்தை எல்லாம் தணித்துக் கொள்கின்றனர்,

முதலாவது உங்கள் கோபம் கொழுந்துவிட்டு எரியும்போது ஒருபோதும் தண்டனை கொடுக்காதீர்கள். கோபம் தணிந்தபின் காரியங்களை நன்றாக எடுத்து விளக்கிக் காட்டியபின்னரே தண்டனையை நிறைவேற்றுங்கள். பிள்ளைகள்மீது உங்களுக்கு இருக்கும் ஆதிக்கம் மட்டும்போதாது. அத்துடன் அன்பும் இணைந்து செல்லவேண்டும்.

### பொழுதுபோக்குகள்

குழந்தைகளின் திறமைகளை விருத்திசெய்வதற்கான சந்தர்ப்பங்களை அவர்களுக்கு அளியுங்கள். சில நல்ல பொழுதுபோக்குகள் (Hobbies) அறிமுகப்படுத்தி பயனுள்ளவகையில் நேரத்தைச் செலவிடச் செய்யுங்கள். உங்களது குழந்தைகளிடம் சோம்பேறித்தனத்தை ஒருபோதும் அனுமதிக்காதீர்கள். அவர்களை சுறு

(6-ஆம் பக்கம் பார்க்க)

---

# வைத்தியரைத் துணப்படுத்திய வைத்திய நாதர் சாயிபாபா

**உ**ரவகொண்டா, ஆனந்தப்பூர் மாவட்டத்திலுள்ள சிறிய ஊர். இங்குள்ள உயர்நிலைப் பள்ளியில் சத்திய நாராயண ராஜூவுடன் சக மாணவராக சிலகாலம் கல்வி பயின்றவர் மீரான் மொய்தீன். உயர்நிலைப் பள்ளிப்படிப்பை முடித்துக்கொண்டு, மருத்துவம் படிக்க சொந்த ஊரான உரவகொண்டாவை விட்டு வெளியேறினார். அதன் பின் மீரா மொய்தீன், பிறவி ஞானி, சத்திய நாராயண ராஜூவையோ அல்லது தற்போது நாம் வணங்கும் சாயீசன் ஸ்ரீ சத்திய சாய்பாபாவையோ- சந்திக்கும் பாக்கியம் இவருக்குக் கிட்டவில்லை.

மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்றதும் உரவகொண்டா திரும்பினார். அங்கு ஒரு மருத்துவமனையை அமைத்து, வைத்தியத் தொழிலை ஆரம்பித்தார். தொழிலில் நல்ல பெயரும் வருவாயும் கிடைத்தது.

தக்க வயதில் விவாகமும் இவருக்கு நடந்தது. இவரின் இல்வாழ்க்கை அமைதியாக முன்னேறிக்கொண்டிருந்தது. மீரான் மொய்தீன் பத்துக் குழந்தைகளுக்கு தந்தையானார்.

சுகம் - துக்கம், செல்வம் - ஏழ்மை இலாபம்- நஷ்டம், போற்றுதல்-தூற்றுதல் என்ற எதிர் எதிரான நிலைகள் நிறைந்ததே மனித வாழ்க்கை.

பத்துக் குழந்தைகளை பராமரிக்கவேண்டிய தாய் மரணமடைந்தாள். மீரா மொய்தீன் தாங்



சாயிபாபா

கொணுத்துக்கத்தில் அமிழ்ந்தார். மருத்துவமனையின் நிர்வாகமும் தன்சொந்த பத்து செல்வங்களையும் பராமரிப்பதும் அவருக்குப் பெரும் பிரச்சினையாக தோன்றியது.

கவலைகளைக்களைய, மருதியை அடைந்து ஆண்டவனின் அருளையும் அனுக்கிரகத்தையும் பெறவேண்டியவர், கெட்ட சிநேகிதரின் சகவாசத்தைச் சம்பாதித்தார். இதன்மூலம் கெட்ட பழக்கங்களுக்கு அடிமையானர். சிறு பிரச்சினையை எதிர்த்துப் போராட சக்தியற்றவர், மேலும், மேலும் பிரச்சினைகளைப் பெருக்கினர். கவலைகள் கூடிற்று. அவரின் மனோநிலை தாக்கப்பட்டது. நித்திரை சிதைந்தது.

நித்திரை மாத்திரைகள் அவருக்கு ஒருசில மணித்தியாலங்கள் மாய அமைதியைக் கொடுத்தன. உள்ளுக்குள் தேட வேண்டிய அமைதியையும் சாந்தியையும் வெளியிலிருந்து விலைக்குவாங்க முயன்றார். முடிவு கொடிய மயக்கமருந்து- 'மோபியாவை' ஊசிமூலம் உடம்பில் செலுத்தினர். நாளொன்றிற்கு இரண்டு குப்பிகளுடன் வைத்தியம் தொடங்கிற்று. மருந்தின் வேகத்தால் சற்று உற்சாகம் பெற்றார். தன் வேலைகளை ஓடி ஆடிச் செய்தார். ஆனால் இந்தநிலை நீடிக்கவில்லை.

மருந்தைக் குறைப்பதற்கு அவர் எடுத்த

சுகம் - துக்கம், செல்வம் - ஏழ்மை, இலாபம் - நஷ்டம், போற்றுதல் - தூற்றுதல் என்ற எதிர் எதிரான நிலைகள் நிறைந்ததே மனித வாழ்க்கை.

முயற்சிகள் எல்லாம் தோல்வியில் முடிந்தது. குறைந்த மருந்தில் உடம்பு முற்றிலும் இயங்க மறுத்தது. அத்துடன் கடுமையான வியர்வை, களைப்பு அமைதியின்மை இவைகளால் பிடிக்கப்பட்டார்.

கையிலிருந்த பணமும் கரைந்துவிட்டது. தொழிலில் வருவாய் படிப்படியாகக் குறையத் தொடங்கிற்று. அவரிடம் சொந்தமாகவுள்ள இரண்டு துண்டு காணியையும், ஒரு சிறு வீட்டையும் பணம் தேவைப்படும் போது விற்றார். இதனால் கிடைத்த பணத்தாலும். சொற்ப வருவாயாலும் காலத்தைக் கழித்தார். தனது பிரச்சினைகளை அவரே கூறுவதைப் பாருங்கள்;-

'பத்துக் குழந்தைகள்- (6 பெண், 4-ஆண்) எவ்வாறு வாழ்கின்றார்கள்- என்ற சிந்தனையே எனக்கு ஏற்பட்டதில்லை. அவர்கள் உணவற்று, உடையற்று, பெற்றோரின் அன்பற்று பெரும் அல்லற்பட்டனர். என் மேல் மிகவும் நம்பிக்கையும்,நன்மதிப்பும் வைத்த ஒருசில நோயாளிகள் வைத்தியத்திற்காக என்னைத் தேடிவருவார்கள். அவர்கள் என்னிடம் ஏதும் பணம் தருவதை கண்டால் குழந்தைகள் என்னை மொய்த்துக் கொண்டு, அந்தப்பணத்தில் ஒருபகுதியையாவது அரிசி வாங்குவதற்குத் தரும்படி பன்றுடுவார்கள்.

நானே கெட்டவார்த்தைகளைக்கொட்டி அவர்களை விரட்டுவேன். குழந்தைகள் என்ன சாப்பிடுகிறார்கள், எவ்வாறு உயிர்வாழ்கிறார்கள் என்ற சிந்தனை அற்றவனாக வாழ்ந்தேன். 'மோபியா' வேண்டுவதற்குப் பணம் சேர்ப்பதே என் நோக்கமாக இருந்தது.

குழந்தைகளின் பரிதாபகரமான நிலையைக் கவலைத்த நோயாளிகள், எனக்குச் சேரவேண்டிய பணத்தின் ஒருபகுதியை, எனக்குத் தெரியாமல் அவர்களுக்குக் கொடுப்பார்கள். பத்துக்குழந்தைகளும் அதிலே பசியாறும். நெடுங்காலம் இத்தகைய மிருகவாழ்க்கையே நடத்தினேன்.

ஆனால் என் நிலையோ

**- சத்தியா -**

(6ஆம் பக்கம் பார்க்க)

---

# இன்பம் பயப்பவை கலைகள்

## மெய்யியலின் கிளை அழகியல்

**ப**ண்பாடு - கல்வி- அழகியல்: இவை மூன்றும் நெருங்கிய தொடர்புள்ள எண்ணக்கருக்கள். அழகியல் என்பது கல்வியில் அடங்கும்; கல்வி என்பது பண்பாட்டில் அடங்கும். அதாவது, பண்பாடு, கல்வி, அழகியல் என்னும் மூன்றினுள்ளும் பண்பாடே மிகவும் பரந்ததாகும்.

மானுடவியலாளர் கருத்துப்படி, மக்கள் கூட்டமொன்று தனக்கென வளர்த்தெடுத்துள்ள பௌதிகப் பொருள்கள், கருவிகள் பழக்கவழக்கங்கள் உட்பட, தத்துவம்,சமயம், சட்டம், விஞ்ஞானம், அறநெறி, கலைகள் ஆகிய அனைத்தும் பண்பாடென்ற பதத்தினுள் அடங்கும். இந்த விரிந்த கருத்தின்படி நோக்கும்போது, சமூகத்தில் நிலவும் பண்பாட்டைப் பயின்று கொள்வதற்கு, நாம் மேற்கொள்ளும் முயற்சியின் ஒரு சிறு பகுதியே கல்வி என்பது புலனாகும். அப்படிப் பார்க்கும்போது, கல்வி முழுவதுமே பண்பாட்டுக் கல்விதான். விஞ்ஞான, தொழில் நுட்பக் கல்வியுங்கூடப் பண்பாட்டுக் கல்வியேதான்.

என்றாலும், பண்பாடென்றும் பதத்துக்குச் [illegible] கொண்டு [illegible] நாம் [illegible] கொடுப்பதுண்டு. தலைமுறைப் பௌதிக உலகு சார்ந்த கூறுகளைத் தவிர்த்து விட்டு, கலை-இலக்கியஞ் சார்ந்த கூறுகளுக்கு அதிக அழுத்தம் தந்து அவற்றை மாத்திரமே பண்பாடென்ற பதத்தினுற் சுட்டுவதுண்டு. 'பண்பாட்டுக் கல்வி' என்னும் தொடரைக் கையாளும்போது, இந்தச் சுருங்கிய கருத்தையே நாம் மனங்கொள்ளுகிறோம்.

அழகியல் என்றால் என்ன? 'அழகியற்கல்வி' [illegible] டிருக்கிறோம். நடனம், பாட்டு, ஓவியம், கைப்பணி போன்றவற்றை ஒருமிக்கச்சேர்த்து அழகியற் பாடங்கள் என்று சொல்லுவது பொது வழக்கு.

ஆனால், உண்மையில் அழகியல் என்பது மெய்யியலின் ஒரு கிளையாகும்;தத்துவ ஞானத்தின் ஒரு பிரிவாகும். இதனை முருகியல் என்றும் சிலர் கூறுவதுண்டு.

அழகு என்றால் என்ன, அழகிய பொருளின் தனித் தன்மைகள் யாவை? அழகினை எவ்வாறு வருணிக்கலாம், அழகியல் அனுபவம் எப்படிப்பட்டது. கற்பனை என்றால் என்ன, கற்பனைக்கும் கலைக்குமிடையேயுள்ள தொடர்பு எப்படிப்பட்டது, கலையினை விளங்கிக் கொள்வது எவ்வாறு, கலையின் பெறுமதியை எவ்வாறு மதிப்பிடலாம்- இவை போன்ற விஞக்களுக்கு விடைதர முற்படும் துறையே அழகியல். சங்கீதம் ஒரு கலை; கலையின் உள்ளடக்கம் அழகு; அழகு பற்றிய விசாரணை அழகியல்; ஆகையால் அழகியல் உணர்விஞலே சங்கீதக் கலைஞர்களும் பயன் பெறலாம்.

ஓவியம்,சிற்பம்,இசை, பாட்டு, கூத்து ஆகிய அனைத்துக் கலைகளுக்கும் அடிப்படையாக உள்ள கோட்பாடுகளை விளக்குவது அழகியல்; இவற்றின் பொதுப்பண்புகளை இனங்கண்டும் தனிப்பண்புகளை வேறுபடுத்தியும் தெளிவுபடுத்துவது அழகியல். ஆகையால் அது பண்பாட்டுக்கல்வியிலே ஒரு முக்கியமான இடத்தைப் பெறுகிறது.

ஆனல் அழகியல் என்பது மிகவும் ஆறுதலாகவும் ஆழமாகவும் பயில வேண்டிய ஒரு துறை. இதில் முறைமையாக ஈடுபட்ட தமிழ் அறிஞர்கள் மிகச் சிலரே. கலாயோகி ஆனந்தக்குமாரசாமி அவர்கள் இந்தத் துறைக்கு வழங்கிய பங்களிப்பு மிகவும் பெறுமதி வாய்ந்தது; அத்துடன் உலகப் பிரசித்தி பெற்றது. கலைப்புலவர் க. நவரத்தினம் முதலானவர்களும் இந்தத்துறையிலே கணிசமான பணிகளை ஆற்றியுள்ளனர். ஆயினும் அழகியல் பற்றிய தெளிவைப் பெறுவதற்குத் துணை நிற்கக் கூடிய நூல்கள் தமிழ் மொழியில் மிகவும் குறைவாகவே வெளிவந்துள்ளன.

இந்த நிலையில், அழகியல் நூலுணர்ந்தார் கண்டறிந்து கூறியுள்ள ஆரம்ப எண்ணக் கருக்கள் சிலவற்றை, இசைக் கலையுடன் தொடர்புபடுத்தி அறிமுகஞ்செய்து

(6-ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவ மணிகளே!

சம்பூரண சலவைக்கு, நுரைவளம் கூடிய மில்க்வைற் நீலசோப்பை வாங்கி உபயோகியுங்கள். புதிய விலை ரூபா 2-50 மட்டுமே

10 மேலுறைகளை அனுப்பி உலகப்படம், இலங்கைப்படம் ஒரு செற் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்.**

**சஞ்சீவி**

18 - 07 - 1987 சனிக்கிழமை

படிப்பினை

பொதுநலத்தைக் காந்தியைப்போல் பொழுதும் எண்ணி
பொறுப்புணர்ந்து சேவைகளைப் புரியவேண்டும்
பொதுப் பணத்தைக் கண்போலப் போற்றி எந்தப்
பொழுதும் அதன் கணக்குகளைப் பொறித்து நீட்டி
மதிப்பதனோ தூற்றுகற்கோ கொடுத்திடாமல்
தூய்மையுள்ள அறங்களுக்குத் துணையாகும்
மதிநலத்தைக் காந்தியைப்போல் மறைநகாத்து
மக்களுக்குத் தொண்டுசெய்வோர் மலியவேண்டும்.
— காந்தி அஞ்சலி

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்.**

# இரண்டில் எந்தப் பந்தயம் வெல்லும்?

# காமினியின் புதியதா, ஜே. ஆரின் பழையதா?

1957 பந்தயம் வெல்லுமா? 1987 பந்தயம் வெல்லுமா?

இப்போதைய தர்மிஷ்டர் 1957 இல் ஒரு பந்தயம் பிடித்தார்.

என் அரசியல் வாழ்வில் வடக்கு—கிழக்கு இணைப்புக்கு ஒருபோதும் சம்மதியேன்—

தர்மிஷ்டர் பிடித்த பந்தயம் இதுதான்.

தர்மிஷ்டர் இப்படிப் பந்தயம் பிடித்த சமயத்தில் கிழக்கிலே சேருவில இல்லை, அம்பாறை இல்லை; ஒரு சிங்கள எம். பி.தானும் இல்லை. ஏன் தமிழர், முஸ்லிம் எம். பி ஒருவர் கூட யு.என். பி.யில் இல்லை—

வடக்கு, கிழக்கு இணைப்புக்குச் சம்மதித்தால் தமிழர் இராச்சியம் ஒன்று உருவாகி விடும் என்பதே அன்று அவர் கூறிய காரணம்.

தமிழீழத்தின் வரை படத்தை தமிழர் தயாரிப்பதற்கு முன்னரே தான் தயாரித்து அதைத் தூக்கிக்கொண்டு கண்டிக்கு பாத யாத்திரை செல்ல முயற்சித்தவரும் அவரே!

இவ்விஷயம் ஏற்கனவே இப்பத்தியில் முன்னர் ஒரு முறை கூறப்பட்டது தெரிந்ததே.

1957 இல் இப்பந்தயம் பிடிக்கப்பட்ட போது அத்துலத்முதலி, காமினி திஸநாயக்கா ஆகியோர் அரசியலில் அரிச்சுவடியும் படிக்கத்தொடங்கியிருக்கமாட்டார்கள்.

இடையிலே யாழ்ப்பாணம் வந்திருந்த சமயத்திலும் 'வடக்கு-கிழக்கு இணைப்பை இனியும் எதிர்ப்பேன்' என்று தமிழர் மத்தியில் துணிந்து சொன்னவர் தர்மிஷ்டர்.

இன்னும் பந்தயத்தில் அவர் தோல்வி காணவில்லை.

இதனால்தான் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் எல்லாம் தோல்வியில் முடிந்து கொண்டு வருகின்றன.

ஆனல் கடந்த வாரம் அமைச்சர் காமினி ஒரு பந்தயம் பிடித்திருக்கின்ருர்.

**காமினியின் பந்தயம்**

இன்னும் இரண்டு மாதங்களில் இனப்பிரச்சினை, தீவிரவாதப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டு விடும்.'' இது பற்றி பந்தயமும் பிடிக்கத்தயார்—இப்படி அமைச்சர் காமினி டகிரங்கக் கூட்டம் ஒன்றில் கூறியிருக்கின்ருர்.

1957 இல் பிடிக்கப்பட்ட பந்தயம் தோல்வியில் முடியப்போகின்றது என்பதைத்தான் அமைச்சர் காமினி கூருமல் கூறியுள்ளாரா? இப்படி ஒரு சந்தேகம் கொழும்பு சிங்கள தீவிரவாதிகள் மனதில் ஏற்பட்டுள்ளதாம்.

இரண்டு மாதத்தில் தீர்வு என்பது வடமராட்சி மாதிரியான தீர்வாகி விடுமோ—இப்படித் தமிழர் மனதில் வேறு கலக்கம் என்று ஒரு தகவல்.

'துட்ட' காமினியாக அல்லாமல் 'நல்ல' காமினியாகவே அவர் பந்தயம் பிடித்துள்ளார் என்று நம்பி மேலே ஆராய்வோம்.

டிச.19 யோசனை ஏதாவது ஒருவகையான நிர்வாக இணைப்பையே வலி

## அன்று போட்ட அரசியல் சுருக்கு இன்று போட்டவரையே மாட்டுமா?

யுறுத்துகின்றதாகச் செய்தி.

இந்தியா போரியுள்ள புதிய யோசனை முழு அளவிலான இணைப்புக்கு வழிகோலவேண்டும்.

இந்த நிலையில்—இணைப்பு எப்போது? என்ற அளவுக்கு அரசியல் பேச்சுக்கள் வளர்ந்து விட்டன.

**இணைப்பும் வாக்கெடுப்பும்**

முதலில் இரண்டு மாகாணங்களையும் இணைத்துதனிமாநிலஅமைப்பு; குறிப்பிடப்பட்ட காலத்தின் பின்னர்தான் அந்த அமைப்பில் தொடர்ந்து இருக்கவேண்டுமா? என்பதை அறிய கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்,

—இது இந்தியாவின் நிலைப்பாடு.

கொழும்பு அரசு இதற்குச் சம்மதிக்கவில்லை;

முதலில் கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு அதன் தீர்ப்பைப் பொறுத்துத்தான் இணைப்பு — இப்படி கொழும்பு வலியுறுத்துகின்றது.

கிழக்கில் முஸ்லிம்களும் சிங்களவர்களும் இணைப்பை எதிர்க்கின்றனர். கொழும்பு அரசு தனது நிலைப்பாட்டுக்கு இப்படி காரணம் காட்டுகின்றது.

இணைப்பு இல்லாமலே இரண்டு மாகாணங்களுக்கும் ஒரு முதலமைச்சர், ஓர் அமைச்சரவை என்றெல்லாம் கொடுக்கத் தயார் என்ற ரீதியில் கொழும்பு அரசு வட்டாரங்கள் தயாராக இருப்பதாவும் கூறப்படுகின்றது.

இந்தத் திட்டம் சரி வருமா?

இரண்டு மாகாணங்களிலும் தனித்தனித் தேர்தல் நடத்தப்படும்.

வடமாகாணத்தில் நூற்றுக்கு நூறு தமிழரே வெற்றிபெறுவர்.

அவர்களுக்கு ஒரு மாகாண சபை.

கிழக்கு மாகாணத்தில் தனித் தேர்தல் அவர்களுக்கு ஒரு தனி மாகாண சபை.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுடன் சேர்ந்து சிங்களவர் போட்டியிட்டு அதிகாரத்தைப் பிடிப்பர் என்று வைத்துக்கொள்வோம்;

(இதுதான் கொழும்பு அரசின் திட்டம்)

வடக்கு மாகாணத்தில் தனித்தமிழ்க் கட்சி ஒன்று அதிகாரத்தை அடைக்கும் என்றும் வைத்துக்கொள்வோம்.

இந்த நிலையில் எப்படி ஒரு முதலமைச்சரை இரண்டு மாகாணங்களும் சேர்ந்து தெரிவு செய்யமுடியும்.

அப்படி வருவதாக இருந்தால் ஒன்று வடக்கில் நிர்வாகத்தைப் பிடிக்கும் கட்சி, கிழக்கிலும் அதிகாரத்துக்கு வரவேண்டும்.

அல்லது கிழக்கில் நிர்வாகத்தைப் பிடிக்கும் கட்சி வடக்கிலும் அதிகாரத்துக்கு வரவேண்டும்.

அம்பாறைத் தொகுதிச் சிங்களவர் பிரதேசத்தைக் கிழக்கு மாகாணத்தில் இருந்து அகற்றி விட்டாலும் கூட திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சேருவில தொகுதி, திருமலைத் தொகுதியில் மற்றும் பகுதிகளில் உள்ள சிங்களவர் தொகை கணிசமாக (சுமார்மூன்று லட்சம் வரையில்) இருக்கும்.

அதை வைத்து கிழக்கு மாகாணத்தின் அதிகாரம் யார் கையில் என்பதை முஸ்லிம்களுடன் சேர்ந்து தீர்மானிக்க முடியும். இப்படியும் – ஒரு நப்பாசை அரசு வட்டாரங்களில் உண்டு.

**நிபந்தனைக்கு உட்காரணம்**

எப்படியும் கிழக்கை கைவிடக்கூடாது என்ற எண்ணத்தில் தான் கொழும்பு முதலில் சர்வசன வாக்கெடுப்பு, பின்னர்தான் இணைப்பு என்ற நிபந்தனையை வைத்துக்கொண்டு இருக்கின்றது.

கிழக்கு, தமிழரின் தாயகம் என்ற நிலைப்பாட்டை இதன் மூலம் முறியடித்துவிடலாம் என்றும் கொழும்பு எண்ணுகின்றது.

இரண்டு மாகாணங்களையும் இணைக்காமலே ஒரு முதலமைச்சர் பதவியை உருவாக்கலாம் என்ருல்–

இரண்டு மகாணங்களுக்கும் பொதுவான தேர்தலை நடத்தி ஒரு முதலமைச்சரை தெரிவு செய்ய அனுமதிக்கலாமே!

எப்படியும் கிழக்கு மாகாணத்தை ஒரு குழம்பிய குட்டை'யாக வைத்து இருக்கவே கொழும்பு அரசு திட்டம் தீட்டியுள்ளதைத் தான் இந்தப் பிடிவாதம் காட்டுகின்றது.

**இடம் பெயர்ந்தோர் நிலை என்ன?**

முதலில் சர்வசன வாக்கெடுப்பை கிழக்கில் நடத்துவதானல் இடம்

**உள்ளும் புறமும்** (குறுமுனி)

பெயர்ந்த இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் எப்படி வாக்களிக்க முடியும்!

சுமுகமான தீர்வு ஏற்பட்ட பின்னர் தான் இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிப்போக முடியும்.

நிரந்தரப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத நிலையில் இடம்பெயர்ந்தவர்கள் திரும்பிப் போவார்களா?

நிரந்தரப் பாதுகாப்பு எப்போது உறுதிப்படுத்தப்படும்?

வடக்கு-கிழக்கு இணைப்பில் தான் தமிழர் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்பது சகலருக்கும் தெரிந்த உண்மை.

இந்த உண்மையை உணர்ந்து தான் ''முதலில் இணைப்பு; பின்னர் சர்வசன வாக்கெடுப்பு'' —என்ற நிலையை இந்திய தரப்பினர் வலியுறுத்துவதாகத் தெரிகிறது.

கொழும்பு அரசு கூறுகின்றபடி முதலில்கிழக்கு மாகாணத்தில் சர்வசன வாக்கெடுப்பு நடத்துவதை ஏற்றுக் கொள்வதாக வாதத்துக்கு வைத்துக் கொள்வோம்.

ஆனல் ஒரு நிபந்தனை. இணைப்பை எதிர்த்து பந்தயம் பிடித்த 1957 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் இருந்த சனத் தொகை விகிதாசாரப் படிசர்வசனவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

இதற்கு தர்மிஷ்டர் தயாரா?

எதிர்ப்பை எப்போது தெரிவிக்கத் தொடங்கினரோ அன்று இருந்த நிலையை வைத்துத்தானே தீர்ப்புக்காண வேண்டும்!

இது தானே உண்மையான தார்மீகம்!

என்ன செய்வது, தானே உருவாக்கிய பேரினவாதத்துக்கு பலியாகி விடவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

1957 இல் யாருக்கோ போட்ட 'அரசியல் சுருக்கு', இன்று போட்டவருக்கே திரும்பி விட்டது.

இந்த நிலையில் தர்மிஷ்டரின் பந்தயம் வெற்றி காணுமா? அல்லது காமினியின் பந்தயம் வெற்றி காணுமா?

'கப்பல் ஒரு தொடர் கதை' முடியும் வரை பொறுத்திருந்து பார்ப்போமே!

★

# கம்பன் விழா

## இன்றைய நிகழ்ச்சிகள்

வட்டுக்கோட்டை, ஜூலை 18

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் இரண்டாம் நாள் ''கம்பன் விழா'' நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் இன்று மாலை 4-30 மணியளவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ச. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

திரு. எஸ். சிதம்பரநாதன் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவினை மகாராணி ரெக்ஸ்ரைல்ஸ்உரிமையாளர் திரு. எஸ். சோமசேகரம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.

கவிஞர் வே. ஐயாத்துரை தொடக்கவுரை நிகழ்த்துவார்கள்.

கவிஞர் இ. முருகையன் தலைமையில் நடைபெறும் கவியரங்கில் ''அறம் வல்லும் என்ற கம்பன் அடியினை நினைக்க'' என்னும் தலைப்பில்—

'நகை வரும்' என்று கவிஞர் ச. வே. பஞ்சாட்சரமும்—

'நாணம் தோன்றும்' என்று கவிஞர் கல்வயல் வே. குமாரசாமியும்–

'வெகுளி பொங்கும்' என்று கவிஞர் காரை சுந்தரம்பிள்ளையும்–

'வேதனை மிகுந்து நிற்கும்' என்று கவிஞர் வாசுதேவனும்–

'சலிப்பே தோன்றும்' என்று கவிஞர் சோ. பத்மநாதனும்–

'உரம் வரும்' என்று கவிஞர்புதுவைஇரத்தினதுரையும் கவிபாடுவர்.

(உ- 161)

## வவுனியா----

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

விஜயம் ஓர் அரசியல் தூது அல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விசா கோரி அவர் கொடுத்துள்ள விண்ணப்பம் தூதரகத்தின் பரிசிலனையில் உள்ளது எனவும் திருமதி பூரி தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்திப்பதற்காகத் தானே அவர் தமிழகம் செல்கின்ருர் என வினவியபோது தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் தானே இருக்கின்ருர்கள் என திருமதி லக்ஷ்மி பூரி திருப்பிக் கேட்டார். (உ-164)

## ஆர். விக்கு . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ணம் வளர உழைப்போம்—இப்படி தனது செய்தியில் ஜனதிபதி ஜெயவர்த்தன தெரிவித்து இருந்தார்.

பிரதமர் பிரேமதாஸாவும் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியிருக்கிருர். (எ)

## வீர மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

நேற்று தற்செயலாக நடைபெற்ற வெடிவிபத்தில் பதுமன்'(தா குயின்ரஸ் குறூஸ் பெரிய பண்டி விரிச்சான்) வீர மரணமடைந்தார் என விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்,

அவருக்கு வீரவணக்கம் செலுத்தி புலிகள் அறிக்கை விடுத்திருக்கின்றனர். (உ)

## தமிழர்கள் . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

திரு. டிக்ஸிற் செய்தியாளரிடம் தெரிவித்ததாவது;

தமிழரின் அடிப்படைக் கோரிக்கைகள் பற்றியும்–

ஒட்டு மொத்தமான யோசனைகளைத் தயாரிப்பதில் இந்தியா எந்த வகையில் ஒத்துழைக்க முடியும் என்பது பற்றியும் விளக்கம் கேட்கவே என்னை அழைத்தனர்.

அரசியல் தீர்வு காண வேண்டியதன் அவசியம் பற்றி வலியுறுத்துவதும்,

தமிழரின் நலன்களுக்கு ஏற்புடைய யோசனைகளை வகுக்க வேண்டிய தேவையை கொழும்பில் எடுத்துச் சொல்வதுமே இந்தியாவின் அணுகுமுறையாக இனி அமையும்.

தமிழ்ப் போராளிகளின் நிலைப்பாடு குறித்தும் ஸ்ரீலங்கா ஜனதிபதி கேட்டார்.

அவர்களின் நிலையை இந்தியா அனுமானிக்கும் பின்னணியில் தெரிவித்தேன்.

டிசம்பர் பத்தொன்பது யோசனைகளை ஆரம்பமாக வைத்து தமிழர்களுக்கு ஏற்புடைய தீர்வு ஒன்றைக் கட்டி எழுப்ப முடியும் என்றும் நான் எடுத்துக் கூறினேன்.

—இப்படித் திரு. டிக்ஸிற் தெரிவித்தார். (அ–எ)

## 12 சிப்பாய்கள் - - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யப்பட்டனர்.

அப்படிச் செய்த ஸ்ரீலங்கா அரசு எங்கள் பன்னிரண்டு பேரின் விஷயத்தில் ஏன் தாமதம் காட்டுகின்றது என்பது தெரியவில்லை.

இப்படித் தாமதம் செய்வது மனிதாபிமானமற்ற, மிருகத்தனமான செயல்களுக்கு ஒப்பானது.

போர் பரிமாற்ற அடிப்படையில் விடுதலைப் புலிகளின் மனிதாபிமான கோரிக்கையை ஏற்று எம்மை விடுவியுங்கள் என்று அரசுக்கு அறிவித்துள்ளோம்.

சிறைபிடிக்கப்பட்ட 3 ஆம்மாதம் நாம் உண்ணாவிரதம் இருக்க முற்பட்டோம்.

மனிதாபிமான முறையில் அரசுடன் பேச்சு நடத்துகின்ரேம் என்று புலிகள் தெரிவித்ததால் நாம் உண்ணாவிரதம் இருப்பதை நிறுத்தினோம்.

அரசு இன்னும் செவிசாய்க்காததினால் தான் இன்று அடையாள உண்ணாவிரதமிருந்தோம்.

இதற்கும் அரசு செவிசாய்க்காது விட்டால் நாம் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துவோம்.

அதன் மூலம் எம் அரசின் கொடூர வேஷத்தை சிங்கள மக்களுக்கு மட்டும் அல்ல, உலகுக்கும் எடுத்துக்காட்டுவோம்.

புலிகள் எம்மை நன்ருக உபசரித்து வருகின்ருர்கள்.

இருந்தும் அம்மா, அப்பா, சகோதரர்களை காணுத வேதனை எம்மை வதைக்கின்றது.

வடமராட்சி நடவடிக்கையின்போது ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர் கொலையுண்டும், புலிகள் எம்மை சித்திரவதை செய்யாது மனிதாபிமான அடிப்படையில் நடத்தி வருகின்ருர்கள்.

இதையாவது மனதிற்கொண்டு எமது அரசு பரிமாற்றத்தின் மூலம் எம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமா?

– சிப்பாய்கள் இப்படிக் கேட்டனர்.

(உ-எ-160)

## தமிழ்த்தாய் . . .

(1-ம் பககத்தொடர்ச்சி)

தாய்மார்கள் சுமித்திரையின் தியாகத்தை உணர வேண்டும்

சுமித்திரை, தான் பெற்ற தன் உயிரினும் மேலான– புதல்வர்கள் இருவரையும் இரண்டு தலைவர்களின் சேவைக்காக ஒப்படைத்த தியாகம் மேலானது.

இத்தியாகச் செம்மலான சுமித்திரையைப் பற்றி நம் தமிழ் மக்கள் குறிப்பாகத் தாய்மார்கள் வாழ்ந்தால் தான் தமிழினத்திற்கு விடிவு ஏற்படும்.

- இப்படிக் கூறினர் பண்டிதர் க. ஈஸ்வரநாதபிள்ளை.

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் கம்பன் விழா முதல்நாள் நிகழ்ச்சியின்போது இன்றைய சூழலில் எம்மவர் நெஞ்சில் பெரிதும் பதிய வேண்டியது சுமித்திரையின் தியாகமே! என்ற பொருளில் பட்டிமன்றத்தில் பேசும்போதே பண்டிதர் க. ஈஸ்வரநாதபிள்ளை குறிப்பிட்டார்.

புலவர் ஈழத்துச் சிவானந்தன் இப்பட்டிமன்ற நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். ... ஞர். (உ-161)

# பிரயாண ஒழுங்குகள்

## HORIZON ENTERPRISES

★ குவைத்

★ சவூதி

★ டுபாய்

★ மாலைதீவு

ஆகிய நாடுகளுக்கான வேலைவாய்ப்புடன் செல்ல விரும்புவோர் எம்மிடம் லேபரர், கிளீனர் முதல் நிர்வாகப் பொறுப்பாளர் வரை அனைத்து வேலை வாய்ப்புடனும் மிக அதிகளவிலான வெற்றிடங்கள் உள்ளமையால் உடன்தொடர்பு கொள்ளவும்.

ஏற்கனவே வெளிநாட்டில் டிறைவிங் வேலை செய்தவர்களுக்கு குவைத் நாட்டிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**முக்கிய குறிப்பு:-**

வடமராட்சி, பளை, செம்பியன்பற்றுப் பகுதிவாழ் மக்களின் வசதி கருதி எமது முதற் கிளைக் காரியாலயம் R. குணரத்தினராசா, கண்டி வீதி, கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கு எதிரில் அமைந்துள்ளது என்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேம். மற்றும் எம்மிடம் கடவுச்சீட்டும் எல்லா நாட்டிற்கான சகலவிதமான முத்திரைகளும் மலிவுவிலையில் கிடைக்கும். உங்கள் கடவுச்சீட்டு (PASS PORT) குறித்த தவணையில் செய்துதரப்படும்.

★ கடிதமூலம் தொடர்புகொள்ள விரும்புவோர் முத்திரையுடன்கூடிய மேல் விலாசமிடப்பட்ட கடித உறையுடன் தொடர்புகொள்ளவும்.

**A. பத்மதாஸ்**

இல. 97/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

வியாபாரம் பெருக ★ ★ ★
★ ★ ★ விளம்பரம் செய்க

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி: 18-07-1987.

P ted and Published by New Uthayan Publi ions (Pvt) Ltd at 292/2 Navalar Road Jaffna on Saturday July 18, 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org